| Jul. 04 Saturday | 2nd Day : Kayilaaya Vaahananth Thiruvila<br>2ம் நாள் : கைலாய வாகனத் திருவிழா |
| Jul. 05 Sunday | 3rd Day : Maampalath Thiruvila<br>3ம் நாள் : மாம்பழத் திருவிழா |
| Jul. 06 Monday | 4th Day : Naayanmaar Thiruvila<br>4ம் நாள் : நாயன்மார் திருவிழா |
| Jul. 07 Tuesday | 5th Day : Manchath Thiruvila<br>5ம் நாள் : மஞ்சத் திருவிழா |
| Jul. 08 Wednesday | 6th Day : Piddukku Mann Sumantha Thiru.<br>6ம் நாள் : பிட்டுக்கு மண் சுமந்த திருவிழா |
| Jul. 09 Thursday | 7th Day : Vertai Thiruvila<br>7ம் நாள் : வேட்டைத் திருவிழா |
| Jul. 10 Friday | 8th Day : Sapparath Thiruvila<br>8ம் நாள் : சப்பறத் திருவிழா |
| Jul. 11 Satury | 9th Day : Ther Thiruvila<br>9ம் நாள் : தேர் திருவிழா |
| Jul. 12 Sunday | 10th Day : Theertha Thiruvila<br>10ம் நாள் : தீர்த்த திருவிழா |
| Jul. 13 Monday | 11th Day : Poongavana Thiruvila<br>11ம் நாள் : பூங்காவன திருவிழா |
| **Panguni Thingkal – பங்குனி திங்கள்** | |
| (1)Mar.16, (2)Mar.23, (3)Mar.30, (4)Apr.06 | |
| **Purattaasai Sani – புரட்டாசி சனி :** | |
| (1) Sep.19, (2) Sep.26, (3) Oct.03, (4) Oct.10, (5) Oct.17 | |
| **Aipasi Velli – ஐப்பசி வெள்ளி :** | |
| (1) Oct.23, (2) Oct.30, (3) Nov.06, (4) Nov.13, | |

**குறிப்பு:** கர்மவினையின் அடிப்படையில் இயங்குகிறது இந்த உலகம். விதியின் வழியில் வாழ்ந்தால் முழுமையான இன்பம் இல்லாத வாழ்க்கையே கிடைக்கும். ஜோதியின் வடிவான இறைவனை நித்தமும் துதிப்போர்க்கு சூரியனாக இருந்து இறைவன் கர்மவினையை கடந்த புத்தம் புதுவழியை காட்டுவான் (திருமந்திரம்)

# சீவன் தான் சிவம்

குஞ்சர் நாகலிங்கம்

**உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெரிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.**

- திருமூலர்

சிவன்தான் எல்லாம். உருவம் பலது. பெயர் வேறு வேறு. ஆனால் அனைத்தும் சிவனே. உன்னில் உள்ளிருக்கும் சிவனைத் தேடு. நீ தியானம், தவம் இவைகளை செய்து உனது உள்ளமான கோவிலை சுத்தம் செய்தால் அங்கே உனது சீவன் உனக்கு சிவனாகத் தோன்றும்.

உன்னையே நீ திருத்து. உன் மனம் பல வேலைகளைச் செய்யும். அதைத் தடுத்து நீயே நேர் வழியில் செலுத்து. உன் மனதை நீயே திருத்து. ஆசை, பாசம் இரண்டிலும் இருந்து விடுபடு. கோபம் ஒரு பாவச் செயல். இதை அறிந்து கொள். உன் மனதிலேயே அந்தச் சிவன் இருக்கிறான். அவரை தினமும் தொழு. ஆசை, பாசம் என்பது ஒரு கயிறு போன்றது. அது எப்பவும் இழுத்துக் கொண்டே இருக்கும். அதை கவனமாக கையாள வேண்டும். இறை தியானம், மந்திரம் இவை செய்தால் நிச்சயம் சாந்தியும், அமைதியும், ஆனந்தமும் கிடைக்கும்.

உலகம் எங்கிலும் நமச்சிவாயமே! எல்லா உயிர்களும் உன் உயிர் போல் மதித்து நடக்கப் பழகிக் கொள். எல்லா உயிரிடத்திலும் அன்பு காட்டு. உலகநீதியின் படி நட. சத்தியத்தைக் கடைப்பிடி. உன் மனம் நோகும் படியாக ஒரு வேலையும் செய்யாதே. உன் மனம் நொந்தால் ஏதோ ஒரு தவறு செய்கிறாய் என்று பொருள். ஊக்கம், பணிவு, இரண்டும் இருந்தால் நம் வாழ்வில் நாம் எண்ணிய செயல்கள் கைகூடும்.

உனது உடல் ஒரு வாடகை வீடுதான். நீ உன்னுள் கவனம் வை. உன்னில் இருக்கும் சிவத்தை நீ உணருவாய். உனது ஐம்புலன் களையும் சரிவர கையாண்டால் உனது சீவனில் இருக்கும் சிவத்தை நீ உணருவாய்.

**ஆணாகி பெண்ணாகி அத்தனையும் நீயாகி**
**உள்ளும் வெளியிலும் நீயேயாகி**
**ஆகாயம் பூமி எங்கும் நீயேயாகி**
**எங்கும் பரவியிருக்கும் நமச்சிவாயமே!**

நான்தான் நீ
நீ இன்றி நான் இல்லை என்றேன்.
நானேதான் நீ என்றாய்
பார்ப்பதெல்லாம் நீயன்றோ என்றேன்
உன்னுள் நின்று பார்ப்பது நீயே என்கிறாய்
உலகத்தில் அனைத்தும் உன்னுடையது என்றேன்
உலகமே என்னுள் அடக்கம் என்கிறாய்
அனைத்துத் தெய்வமும் நீயே என்றேன்
தெய்வம் என்றும் ஒன்றே என்கிறாய்
செய்வினைகள் ஏற்றுக் கொள்வாய் என்றேன்
செய்வித்தவன் நானன்றோ என்கிறாய்
என்னை நீ ஏற்றுக் கொள்வாய் என்கிறேன்
உன்னுள் நீயாய் இருப்பது நானன்றோ என்கிறாய்
தெய்வமே என் செய்வேன் என்கிறேன்
தெய்வம் நீ அன்றோ என்கிறாய்
நானேதான் நீ.! சீவனே சிவன்!!

**ஓம் நமச்சிவாய!**



**யோகர், "எல்லாம் உன் உள்"**
**சாந்தி தருவாய்!**
**சண்முகா! குருநாதா!**
**சீவன் தான் சிவம்!**

# திருக்கோயில்
## சிங்கைக் கிருஷ்ணன்

திருக்கோயில்களின் அவசியத்தை உணர்ந்த நம் முன்னோர்கள் அனைத்து இடங்களிலும் அவற்றை அமைத்தனர். ஆலயம் தொழுவது சாலவும் நன்று; "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" போன்ற முதுமொழிகள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.

திருநாவுக்கரசர் கோயில் இல்லாத ஊரைக் "காடு" என்று குறிப்பிடுகின்றார்.

**திருக்கோயில்கள் இல்லாத திருஇல் ஊரும்**
**திருவெண்ணீறு அணியாத திருஇல் ஊரும்**
**பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும்**
**பாங்கினொடு பல தளிகள் இல்லா ஊரும்**
**விருப்பொடு வெண்சங்கம் ஊதா ஊரும்**
**விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்**
**அரும்போடு மலர் பறித்திட்டுண்ணா ஊரும்**
**அவை எல்லாம் ஊரல்ல அடவி காடே.**

(தனித்திருத்தாண்டகம்: பாடல்:933)

அரசர்களும் செல்வந்தர்களும் பக்தர்களும் காலம் காலமாக கோயில்களை எழுப்புவதிலும் அவற்றிற்குத் திருப்பணிகள் செய்வதிலும், அவற்றில் வழிபாடுகளும் விழாக்களும் நடைபெறச் செய்வதிலும் அதிக ஈடுபாடு காட்டினர். தங்கள் அரண்மனைகளைவிடக் கோயில்களே நிலைத்து நிற்க வேண்டும் என்று எண்ணிய மன்னர்கள் ஆலயங்களை வலிமையாகக் கட்டியதுடன் அவற்றை அவ்வப்போது புதுப்பித்தனர். ஊரின் உயர்ந்த கட்டிடம் ஆலய இராஜ கோபுரம் என்று வரம்பு நிர்ணயித்து அதனை பிற கட்டிடங்கள் மிகா வண்ணம் வாழ்ந்தனர். காலப்போக்கில் எல்லாத் துறைகளிலும் அன்றாட வாழ்வியலிலும் ஆலயங்கள் பின்னிப் பிணைந்தன. தமிழ்நாட்டின் வரலாறே திருக்கோயில்களின் வரலாறு என்று கூறுமளவு ஆலயங்கள் முக்கியத்துவம் பெற்றன. அரசர்கள், அதிகாரிகள், செல்வந்தர்கள், அன்பர்கள் ஆகியோர் அவரவர்களின் இஷ்ட தெய்வங்களுக்கு கோயில்கள் அமைத்தனர். எனவே சிவன், திருமால், முருகன், விநாயகர், அம்மன், கிராம தெய்வங்கள், ஆகிய வடிவங்களுக்கும் கோயில்கள் தோன்றின.

சிவனுக்குரிய நாமங்கள் எண்ணாயிரங்கோடி என்று குறிப்பிடுவர், அவற்றுள் மங்கலம், நிறைவு, தூய்மை என்ற குணங்களை உணர்த்தும் சொல்லே சிவன் என்பர்.

சிவஞானபோதம் என்ற நூல், சிவன் என்ற பெயருக்குத் தூய தன்மை உடையவர்; பேரின்பத்துக்குக் காரணமானவர். முற்றுணர் வுடையவர், ஆகிய மூன்று பொருட்களைக் கூறுகிறது. சிவனுக்குப் பரத்துவம் கூற முயன்றபோது சிவனே மும்மூர்திகளாகத் தோன்றி முத் தொழில்களச் செய்வதால், அவனே பிற மூர்த்திகளுக்கும் முதல்வன் என்ற கருத்து உருவாயிற்று.

ஒருநாமமும் வடிவமும் இல்லாத பரம்பொருள் ஆன்மாக்களுடன் தொடர்பு கொள்ள எடுத்துக்கொண்ட வடிவமே சிவன் எனப்படுவார். இல்லா ஒலிகளாகவும் ஈசன் விளங்கும் போது "சிவன்" என்ற ஓசையே அப்பரம்பொருளை நம்முடன் பிணக்க வல்லது. இப்பரம்பொருள் முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து நின்று ஆன்மாக்களின் மும்மலங்களை நீக்கி முக்தி அளிக்கிறார். இந்நோக்கத்துடன் சிவன் அருவம், அருவுருவம், உருவம் என்ற மூவகைத் திருமேனிகளைக் கொண்டு திகழ்கிறார். இவற்றுள் அருவுருவமான லிங்கத் திருமேனியாகவும் உருவத் திருமேனியாகவும் ஈசன் எழுந்தருளிய இடமே சிவாலய மாகும். "சிவாலயங்களைச் சிவபெருமானாகவே வழிபட வேண்டும்" எனச் சிவஞானபோதம் கூறுகிறது.

"மாலற நேய மலந்தவர் வேடமும் ஆலயத்தானும் அரனெனத் தொழுமே" பாடல் பெற்ற தலங்கள்: புனித மண்ணான நம் நாட்டில் எண்ணற்ற சிவத் தலங்கள் அமைந்துள்ளன. சைவசமயம் தழைத்தோங்கப் பாடுபட்ட திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் நேரில் சென்று பாடல்களைப் பாடிய ஷேத்திரங்கள் "பாடல் பெற்ற சிவத்தலங்கள்" எனப் போற்றப் படுகின்றன.

பாடல் பெற்ற சிவத்தலங்கள் மொத்தம்: 274.

**சோழநாடு: 190**
*(காவிரியின் வடகரை 63,*
*காவிரியின் தென்கரை 127)*
**பாண்டியநாடு: 14**
**கொங்குநாடு: 7**
**நடுநாடு: 22**
**தொண்டை நாடு: 32**
**மலைநாடு: 1**
**குடகுநாடு: 1**
**இலங்கை: 2**
**வட இந்தியா: 5**

முற்காலத்தில் தமிழகம் பதிமூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுருப்பதாகத் தொல்காப்பியம், நன்னூல் ஆகியவை தெரிவிக்கின்றன.

@@@@@@@

# ஆலயத்தின் தேவையும் சிறப்பும்

பாலசுப்ரமணியம் சஞ்சயன்

மனிதன் தான் தோன்றிய காலம் முதலே தனக்கு மேலொரு சக்தி இருப்பதாக நம்பிவருகிறான். நாகரிகங்களின் தோற்றத் தோடு மதமும் தோன்றுகிறது. இயற்கையை வழிபட்ட மனிதன், தொடர்ந்து பல்வேறு மதப்பிரிவுகளைக் கடந்து, இன்றும் அந்த மேலான சக்தியை அறிவியலாகவும், ஆத்மீகமாகவும் தேடுகிறான். இந்து மதத்தைப் பொறுத்தவரை அல்லது ஓர் இந்துவைப் பொறுத்தவரை "இறைவனை அடைதல்" என்ற இலக்கே தொன்றுதொட்டு நம்பப் பட்டது. அதாவது முக்திநிலையே இந்துவின் குறிக்கோள் என்று போற்றப்பட்டது.

இந்த உலகு ஓர் மாயை, ஆசைகள் அற்று, ஆணவம் நீங்கி இறைவனை வழிபடுபவ னையே இந்துமதம் உன்னத மனிதனாகப் பார்த்தது. அதாவது துறவி என்று சொல் பவர்கள் இவ்வகையினரே. பற்றற்று பரலோகம் துறந்து பரமனின் திருவடியைச் சேர்தலே இலக்காகக் கொண்டு, நாளை எது வந்தாலும் ஏற்றுக்கொண்டு என்றென்றும் மகிழ்ச்சியோடு வாழ்பவர்களே இந்து மதத்தின் சிற்பிகள். உதாரணமாக புத்தர் மற்றும் அப்பாதையை மதித்த சுவாமி விவேகானந்தர் போன்ற பல இந்து துறவிகள் இந்துமதம் இதுதான் என்று வரையறுத்து வாழ்ந்து காட்டினார்கள்.

அப்படியாயின் ஆகம விதிகள் ஏன், கோயில்கள் ஏன் என நீங்கள் கேட்கலாம். காரணம் எல்லா மனிதர்களாலும் மேலே கூறப்பட்ட துறவியின் நிலையை எய்த முடியாது. சாதாரண மக்கள் படிமுறையாகவே ஆன்மீக ஈடேற்றத்தைப் பெற முடியும். அதற்காக வழிகாட்டல்கள் தேவைப்பட்டன. இந்த வழிகாட்டல்களை ஆலயங்கள் செய்துவந்தன. இன்று செய்கின்றனவா என்பது சிந்திக்க வேண்டியதொன்று எனினும் நாம் ஒவ்வொருவரும் ஆலயங்களின் தேவையை உணர்ந்து செயல்பட வேண்டும். "நீறில்லா நெற்றி பாழ்" "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றெல்லாம் பழமொழிகள் இருக்கின்றன. இவை கோவிலின் இன்றியமையாமையைச் சுட்டிக் காட்டுகின்றன.

திருநீற்றிற்கு எத்தகைய மகிமை சொல்லப் படுகிறதென்பதை இப்பாடலில் நோக்கலாம்.

**"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான்**
**திருநீறே"**

என்று திருஞானசம்பந்தர் பாடி கூன் பாண்டியனின் சூலை நோயை துரத்தினார்.

விறகுக்கட்டையை நெருப்பு சாம்பலா க்குகிறது. அது போல ஞானம் என்னும் நெருப்பு, எல்லாக் கர்மாக்களையும், எரித்து விடும். என்று கீதையில் கண்ணன் கூறியிருக்கிறார். நாம் நெற்றியில் பூசும் விபூதி ஞானத்தின் அடையாளம் என்பது சமய நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. இந்துவின் சின்னமான திருநீற்றுக்கே இத்தகைய மகிமையென்றால் இந்து மதத்தில் எத்தனை எத்தனை விடயங்கள் பொதிந்திருக்கும்.

ஆலயம் என்பது யாதெனில் ஆத்மா லயப்படும் இடம். அங்குள்ள சூழல், மனதை ஒருமுகப்படுத்தி இறைசிந்தனையோடு ஆத்மாவை ஒன்றிணைக்க வைக்கிறது. பாமரமக்களுக்கு அது ஓர் பள்ளிக்கூடம். கலைஞர்களுக்கு கலைக்கூடம். நடனம், சங்கீதம், நாடகம், கூத்து, ஓவியம், சிற்பக்கலை மற்றும் இசைக்கருவிகள் என வளராத கலை ஆலயத்தில் ஏது?

அத்தோடு அங்கு பாடப்படும் கூட்டுப்பிரார்த்தனை, பஜனைப் பாடல்கள் பாடுவோர்களையும் கேட்போரையும் பரவச நிலைக்கு ஆக்குகிறது. ஆம் இது எல்லாம் இந்துக் கோயில்களில் காணப்பட்ட அம்சங்கள்.

அது மாத்திரமன்றி ஆலயத்தின் கட்டுமானம் மற்றும் அங்கிருந்து பரவும் மணியோசை போன்றன ஆத்மாக்களை இறைவன் பால் கட்டுக்குள் அமர்த்துகின்றன. சமயம் என்பது தன்னையும் வாழ்வித்து மற்றவர்களையும் வாழவழி காட்டும் அன்பு நெறி. மக்கள் ஒன்று கூடி வாழ்கின்ற சமுதாயத்துக்கு, உயிர் நாடியாக, பண்பாட்டு மையமாக இருப்பது ஆலயங்களே. ஆலயங்களே எமது அடையாளமாக இருக்கிறது. இக்கருத்தினை ஆலயங்களும் சமய நிறுவனங்களும் (அறங்காவலர்கள், அர்ச்சகர்கள் உட்பட) உணர்ந்து கடைப் பிடிக்க வேண்டியது தலையாய கடமையாகும். ஆலயங்களின் அறங்காவலர்கள் என்று கூறுபவர்களிடம் சமய நம்பிக்கை இருக்க வேண்டும் . வழிபாட்டு நிலையங்களை வியாபார லாபநோக்கத்தில் மட்டும் பார்க்காமல் ஆலயங்களுக்கு வரும் அடியவர்களுக்கு - ஆலயங்களின் தேவையை உணர்த்தி அவர்களையும் பங்காளர்களாக ஆக்க வேண்டும். எமது அடுத்த சந்ததியினருக்கும் ஆலயங்களின் சிறப்பு மற்றும் தேவையை அவர்களுக்கான பாணியில் தெளிவாகக் கூறல் வேண்டும். புலம்பெயர் நாடுகளில் வாழும் சிறுவர்களுக்கு சமய வகுப்புகளும், தமிழ் வகுப்புகளும் நடைபெறும் அறநெறி நிலையங்களாக ஆலயங்களே திகழ்ந்திருக்கின்றன.

இத்தகைய பல்வேறு ஒழுக்கநெறிகளை கட்டுப்பாடுகளை வளர்ப்பதில் ஆலயங்கள் தொன்றுதொட்டு பங்களித்து வருவதால் மக்களுக்கு இது ஓர் நீதிமன்றம். ஆலயங்கள் அறநெறி மன்றம் மற்றும் கலைக்கூடமாக மாத்திரமன்றி அடியவர்களுக்கு அமுதூட்டும் அன்ன சத்திரங்களாகவும் திகழ்ந்திருக்கின்றன. வசதிபடைத்தவர்கள் நற் காரியங்களைச் செய்யும் போது அடியவர்களுக்கு வயிறார உணவூட்டி (மகேஸ்வர பூசை செய்து) வாழ்த்துக்களைப் பெறும் நடைமுறை இன்றும் காணப்படுகின்றது. வாழ்க்கை வேறு வழிபாடு வேறு என்று இல்லாமல் மக்களை மதத்தோடு இணைத்த இந்து மத ஆலயங்களின் சிறப்பு என்றென்றும் மங்காது விளங்கட்டும்.

@@@@@@

# குருநாதன் வைத்தியநாத சுவாமி

## ஏரம்பமூர்த்தி வரப்பிரசாதம்

ஒட்டாவா நதிக் கரையோரம்
தூய்மையான ஒரு கிராமம்
அதன் பெயர் தான் "நோத் கோவர்"
பூமழை தூவிய பூஜாமயம்
அந்தப் புண்ணிய ஸ்தலம் தான்
சிவனின் வைத்தீஸ்வரம்!

இச் சன்னிதி வந்து சரண் அடைந்தால்
நிம்மதி நெஞ்சில் தோன்றிடுமே!
மருந்துகளாலே தீரா நோயும்
அவனருளாலே தீர்ந்திடுமே!
வைத்தியநாதன் பெயரைச்
சொன்னால்
சங்கடம் எல்லாம் ஓடிடுமே
எந்நாளும் அங்கே கோலாகலம்!
பெரும்புண்ணிய ஸ்தலந்தான் வைத்தீஸ்வரம்!
இங்கு நாஸ்த்திகன் கூட ஆஸ்த்திகனாகி
தோத்திரம் பாடி வணங்கிடுவான்!

ஆத்திரம் நீங்கி ஆசியும் ஓங்கி
பக்தியின் மார்க்கம் சென்றிடுவான்!
பொன்னெழில் மேவும் சற்குணசீலன்
பூசை நேரத்திலே, தீபங்கள் ஏற்றி
ஆராதனை செய்து,
அவன் பாதங்கள்
துணை என வாழந்திடுவோம்!

# சர்வ வியாபி

## ஏழூர்நாயகம் ஆனந்தவேல்

பிரபஞ்ச சக்தி எல்லாவற்றிலும் கடந்தும் உள்ளாகவும் இருப்பதால் கடவுள் என்றும் எங்கும் இறைந்து இருப்பதால் இறைவன் என்றும், உலகங்களை ஆள்வதால் ஆண்டவன் என்றும் நாம் போற்றி வணங்குகிறோம். மேலும் இதனையே பரம்பொருள், பரப்பிரம்மம், பரமாத்மா என்றும் மெஞ்ஞானிகள் அழைப்பார்கள். நாயன்மார்கள் ஆதி, அந்தம் அற்ற ஒளி வடிவான சோதி என்று பாடியுள்ளார்கள். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இறைவனை விண்நிறைந்து, மண்நிறைந்தவர், பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் சுடரொளியாய் நிற்பவர், மாசற்ற சோதி, பாசத்தை அறுப்பவர், இன்ப துன்பம் இல்லாதவர், நுண்ணுணர்வானவர் என்று அழகாகக் கூறி யுள்ளார்.

இதனையே தத்துவஞானி வேதாத்திரி சுவாமிகள் கருமையம் மின்காந்த சக்தியாக விளக்க மளித்துள்ளார். மேலும் சில ஆன்மீக அமைப்புகள் பரமாத்மாவை செந்நிற ஒளியாகவும், ஜீவாத்மாவை வெள்ளை நிற ஒளிப்புள்ளியாகவும் உருவகித்துள்ளன. சித்தர்கள் அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்தில் உள்ளது என்று பாடியுள்ளார்கள். இறைசக்தி அண்டசராசரம் அனைத்திலும் நீக்கமற நிறைந்து உயிருள்ள உயிரற்ற சர்வத்திலும் வியாபித்துள்ளது. இறைவனைப் பற்றி எண்ணும்போது முதன்முதலில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், இறைவன் எங்கும் உள்ளார், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் என்று சொல்லித்தந்தது ஞாபகத்தில் வரும். இதனை மற்றைய மதங்களும் ஏற்றுக்கொள் கின்றன. நோபல் பரிசு பெற்ற பௌதீகவியல் விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் (Albert Einstein) கடவுள், சமயங்களை மறுதலித்தாலும், cosmic energy என்கிற பிரபஞ்ச சக்தியையும், பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாயம் என்கிற Ether (agas) ஊடகத்தை (Media) ஏற்றுக்கொண்டுள்ளார். எதிர் காலத்தில் இறை நம்பிக்கை அற்றவர்கள்கூட இதனை ஏற்றுக்கொள்வார்கள்.

"தத் துவம் அசி" "அகம் பிரம்மாஸ் மீ" போன்ற வேத வாக்கியங்கள் முறையே நீ அதுவாக இருக்கிறாய், நான் பிரம்மமாய் உள்ளேன் என்று பொருள்படும். எல்லாம் ஒன்றே என்கிற அத்வைத கொள்கையைப் பின்பற்றுபவர்கள் பரமாத்மா, ஜீவாத்மா இரண்டையும் ஒன்றாகவே காண்பார்கள்.

இறைவனை நாம் பார்க்கலாமா? எப்படி அறிவது? போன்ற கேள்விகள் வேதகாலம் தொட்டு கேட்கப்பட்டு வந்துள்ளது. இறைவனை உள்ளுணர்வால் மட்டுமே உணரலாம். ஐம்பொறிகளால் அறிய முடியாது. ஏனெனில் இவர் சடப்பொருள் அல்லர். பிறவியில் குருடனாக பிறந்த ஒருவரால் காலைக் காட்சியையோ அல்லது இயற்கை அழகையோ வர்ணித்துக் கூற முடியாது. ஆனால் இறைசக்தியை உணர்ந்த மெஞ்ஞானிகள், சித்தர்கள் நாயன்மார்கள், ஆழ்வார்கள் அனுபவித்துக் கூறியவற்றை சிரம்மேல் ஏற்று பின்பற்றி சிறு பிள்ளைகளுக்கும் அறிவுரை வழங்க வேண்டும்.

பரம்பொருள் காலம் (Time), இடம் (Space), பொருள் (Object) ஆகியவற்றிற்கு அப்பால்பட்டது. ஆனால் நாம் இவற்றுக்குக் கட்டுப்பட்டவர்கள். உதாரணமாக ஒட்டாவாவில் வசிக்கும் ஒருவரை ரொறொன்ரோவிலோ அல்லது இலங்கையிலோ தேடிக் கண்டுபிடிக்க முடியாது. அவ்வாறே ஒருவரின் தூல சரீர வாழ்வு அவரின் பிறப்புக்கும், இறப்புக்கும் இடைப்பட்டது. மேலும் ஒரு பொருளின் (உயிரற்ற, உயிருள்ள) பௌதீகத் தன்மையை நீக்கிவிட்டால் அப்பொருள் இருக்காது. ஆனால் இறைவன் இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்.

இறைவன் எங்கும் நிறைந்துள்ளார். அன்பு, கருணை, இரக்கம் உள்ளவர், எல்லாவற்றையும் படைக்கிறார். இருந்தும் எம் மனதில் பல விடை காணமுடியாத வினாக்கள் சந்தேகங்கள் எழுகின்றன.

சிறு தீவாகிய இலங்கையில் சுனாமியால் ஒன்றும் அறியாத அப்பாவிகளான இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் ஒரு சில நிமிடங்களில் அழிக்கப்பட்டது, பிறவியிலேயே ஊனமுற்றோராய் பிறக்கும் குழந்தைகள், அண்மைய யுத்தங்களினால் உலகில் ஏற்பட்டுக்கொண்டு இருக்கும் அழிவுகள், தேவாலயங்கள் மசூதிகள், கோவில்கள், விகாரைகள் அழிக்கப்படுதல் தெய்வச் சிலைகள், யந்திரத்தகடு களவெடுத்து விற்பனை செய்தல், உண்டியல் உடைப்பு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்று பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. எல்லாம் வல்ல இறைவன் ஏன் இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு இருக்கிறார். அரசியல் தலைவர்கள், கொலையாளிகள், கற்பழிப்பவர்கள் போன்றோரின் மனதில் புகுந்து இறைவன் அவர்களை நல்லவர்களாக மாற்ற முடியாதா? என்று நாம் சிந்திக்கலாம்.

இதற்குச் சரியான விளக்கம் மகாபாரதத்தில் உண்டு. இதே கேள்வியை திரௌபதி கிருஷ்ணனிடம் கேட்கிறார். குருஷேத்திர யுத்த முடிவில் பஞ்சபாண்டவர்களைத் தவிர அனைவரும், பஞ்சபாண்டவர்களின் பிள்ளைகள் உட்பட மடிகிறார்கள். மிகவும் கலங்கிய திரௌபதி வசுதேவ கிருஷ்ணனிடம் உங்கள் சக்தியால் துரியோதனன் ஆகியோரது மனதை மாற்றி யுத்தத்தை தடுத்திருக்கலாமே எனக் கேட்டார். கிருஷ்ணன் புன்சிரிப்புடன் பின்வருமாறு பதில் அளிக்கிறார். இப்பூமியில் ஒவ்வொருவரும் பிறக்கும்போது தங்களின் பூரண சுதந்திரத்துடன் (Freedom of will) விருப்பத்துடனேயே, கர்ம விதிப்படி ஆசைகளை நிறைவேற்றப் பிறக்கிறார்கள். நாம்தான் நல்லது கெட்டது எல்லாவற்றையும் தீர்மானிக்கிறோம். ஒவ்வொரு வரும் தாங்களாகவே மாறமுடியுமே தவிர மற்றவர்க ளால் மாற்ற முடியாது. உதாரணமாக வெள்ளிக்கிழமை மாலை ஆலயத்துக்குச் செல்ல வேண்டுமோ? அல்லது மது அருந்தும் கிளப்பிற்குச் செல்ல வேண்டுமோ? என்பதை நாமே தீர்மானிக்கிறோம். மிகவும் பலம் கொண்ட கௌரவர்கள் அழிக்கப்பட்டு தர்மம் நிலைநாட்டப் பட்டது போல அதர்ம வழியில் செல்பவர்கள் ஒழிக்கப்பட்டு சனாதன தர்மம் நிலைநாட்டப்படும்.

பொதுவாக எல்லோரும் இறைவனிடம் தமது சொந்த நலங்கள் குடும்பத்தவர்க்கு தேவையான வற்றையே கேட்பார்கள். அதாவது இவ்வுலக வாழ்வுக்கு தேவையானவற்றையே வேண்டு வார்கள். ஆசைகளை நல்ல வழியில் பூர்த்தி செய்வது தவறில்லை. ஆசைகளினாலேயே இந்த மனிதப்பிறவி எடுத்தோம். ஆசைகளைப் பூர்த்தி செய்ய முடியாது போவதால் வினைப்பயனால் மீண்டும் மீண்டும் பிறந்து அல்லல் படுகிறோம். நாம் எமது எண்ணங்களை ஈடேற்ற பலவித போராட்டங்கள், பொறாமை, வெறுப்பு, கோபம், போன்ற பலவித இன்னல்களைச் சந்திக் கின்றோம். இவ்வுலக வாழ்வுக்குத் தேவையான வற்றில் முக்கியமான ஒன்றை ஒரே மனத்துடன் விரதம் இருந்தோ, காவடி, கற்பூரச் சட்டி எடுத்தோ அல்லது அங்கப் பிரதிஷ்டை செய்தோ இறைவனை இறைஞ்சி நிறைவேற்ற முடியும்.

எமது ஆசைகளை நிறைவேற்றுவதற்காக இந்த மனித உடலை நாம் எடுத்தோம். எமக்கு ஆசை, மோகம், பாசம், பந்தம், இருக்குமட்டும் நாம் தொடர்ந்து பிறந்து உழன்றுகொண்டே இருப்போம். நாம் இன்ப துன்பம் நன்மை தீமை என்பவற்றை சமமாக நோக்கி சிவா அர்ப்பணம் செய்து எமது பாவத்துக்கு பிராய்ச்சித்தம் செய்து நித்திய ஆனந்தத்தை அடைய முடியும். நாம் இன்பம் என்று நினைத்துச் செய்யும் அனைத்துக் காரியங்களின் இறுதி முடிவு துன்பமே. நாம் வயதான காலத்தில் நோய்வாய் பட்டு தாங்க முடியாத வேதனைகள், சோதனைகள் அனுப வித்து இறுதியில் மரணத்தைத் தழுவுகிறோம். நாம் மரணத்தைக் கண்டு பயப்படத் தேவை இல்லை. பிறப்பு மாதிரி இறப்பும் ஒரு சாதாரண நிகழ்ச்சியே.

பல பிறவிகள் பல நாடுகளில் பல மதங்களில் பிறந்து வாழ்வில் சலிப்படைந்து உண்மையான இறைத் தேடலை ஆரம்பிக்கின்றோம். அப்பொழுது முதிர்ச்சி அடைந்த ஆன்மா ஜீவன் முக்தர்களாக வாழ ஆசைபட்டு மனதை உள்முகப்படுத்தி அட்டாங்க யோகம் பயின்று முக்தி அல்லது சமாதி நிலையை அடைகின்றோம். பௌர்ணமி நாளில் முழு நிலவைப் பார்ப்பது போல இலகுவானது என்று பௌத்த சமயம் கூறுகிறது. உமாபதி சிவாச்சாரியார் அருளியது போல குருவருள் உதவியுடன் ஜீவன் முக்தர்களாக வாழ இறை சக்தியை இறைஞ்சி நிற்போம்.

@@@@@@@

# சமயகுரவர் காட்டிய அன்பு நெறி

சிவசோதி சிவஞானம்
அறங்காவலர் சபை - ஒட்டாவா சிவன் கோயில், கனடா

சிவநெறியாகிய அன்பு நெறியில் நின்று வாழ்ந்து காட்டிய அருட்செல்வர்களுள் சமய குரவர்கள் முதலிடம் பெறுகின்றனர்.

உலகில் உள்ள நாம் ஒவ்வொருவரும் நலமாக வாழவேண்டுமாயின் ஒழுக்கத்தையும் கட்டுப் பாட்டையும் கடைப்பிடிக்கவேண்டும். ஒழுக்க நெறியினைப் புறத்தில் மாத்திரம் கடைப் பிடிக்காமல் அகத்திலும் ஏற்படுத்த வேண்டும். அன்பு நெறியினை கடைப்பிடிப்பதன் மூலமே இந்த ஒழுங்கினை நிறைவேற்றிக் கொள்ள முடியும். சமயகுரவர்கள் நால்வரும் இந்த ஒழுங்கான வாழ்வினை மேற்கொண்டு புனிதம் அடைந்தார்கள். இவர்கள் தமக்கு முன்பு இருந்த நாயன்மார்களைப் போற்றியும் துதித்தும் சிவசின்னங்களுக்கு மதிப்பளித்தும் அன்பு நெறியை உலகில் பரப்பியும் திருத்தொண்டு புரிந்தும் வாழ்ந்து காட்டினார்கள்.

**பெருமையால் தம்மை ஒப்பார்**
**பேணலால் எம்மை பெற்றார்**
**ஒருமையால் உலகை வெல்வார்**
**ஊனமேல் ஒன்றுமிலார்**
**அருமையால் நிலையில் நின்றார்**
**அன்பினால் இன்பம் ஆவார்**
**இருமையும் கடந்து நின்றார்**
**இவரை நீ அடைவாய்**

என்று சேக்கிழார் பெருமான் அடியவர் இலக்கணம் பற்றிக் கூறியுள்ளார்.

சேக்கிழார் பெரிய புராணத்தைத் தொடர்ந்தே உலகெங்கும் மகேஸ்வர பூஜை, அடியவர் வழிபாடு விரிவாகப் பரவியதுடன் அறுபத்து மூவருக்கும் சிலையெடுத்து வழிபடும் மரபும் வளர்ந்தது. நாயன்மார்களுடைய குருபூஜைகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. அடியவர் வழிபாடு இல்லங்களிலும் ஆலயங்களிலும் சிறப்பாக நடைபெற்றது. இதனால் அடியவர் கண்ட அன்பு நெறியாக சைவ சமய நெறி பிரகாசித்து வளர்ந்தது.

திருமூலரின் கீழ்க்காணும் திருமந்திரம் சைவசமயநெறி இறைவனை அன்பின் வடிவமாகக் காண்பதை எமக்கு எடுத்து இயம்புகின்றது.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிகிலர்**
**அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.**

தங்களுடைய வாழ்வின் இலட்சியங்களில் இறை உணர்வின் உச்சங்களை அடியவர்கள் பலர் வெளிக் காட்டியுள்ளார்கள். இவ் அடியவர்கள் இறைவனுக்கு மட்டுமல்லாது ஏனைய அடியவர்களுக்கும் அடியவராக விளங்கினார்கள்.

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடுஞ் செம்பொனும் ஒதுக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி**
**வேண்டும் வேண்டா விறலின் விளங்கினார்.**

சமய குரவர்களின் வாழ்வும், வரலாறும் சைவசமய நெறியினை வளர்த்தன. இவர்கள் கும்பிடுவதும் உலகத்தின் பொருட்டே, உதாரணமாக சம்பந்தரின் வாழ்க்கையினை நோக்கினால் இது நன்கு புலப்படும்.

சம்பந்தர் பெருமான் தமக்கென இறைவனிடத்தில் எதனையும் வேண்டவில்லை. உலகம் எங்கும் துன்பம் மறைந்து இன்பம் பெருக வேண்டும் என்றே வேண்டிக் கொண்டார். ஒரு தடவை இறைவனிடம் நிதி வேண்டிய போதும் "நீள்நிதி வேண்டினார்க்கு ஈவது ஒன்று மற்றிலேன் உன்னடி அல்லது ஒன்றறியேன்" என சம்பந்தர் வேண்டுவதாக சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். இது போலவே அவருடைய பல தேவாரப் பாடல்களும் பல அடியவர்களுக்கு அருள் செய்ய வேண்டிப் பாடியவையாகும். உதாரணமாக செங்குன்றூரிற் குளிர்ச்சுரம் நீக்குதல், திரு வீழிமிழலையில் பஞ்சம் தீரக் காசு பெறுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சைவ சமய அடியவர்கள் மக்கள் தொண்டையே மகேசன் தொண்டாகாக் கருதினார்கள். அவர்கள் தமக்கு முன்பிருந்த அடியவர்களைக் குருவாகப் போற்றி வழிபட்டார்கள் என்பதனை வரலாற்றி னூடாக நாம் அறியக்கூடியதாக உள்ளது.

சம்பந்தர் பெருமான் திருக்காளத்தி, மலைக்குச் சென்றபோது கண்ணப்ப நாயனாரின் திருவுருவத்தை கண்டு கும்பிட்டு பயனைப் பெற்றது போலவே வேடர் ஒருவரைக் கண்டு வீழ்ந்து வணங்கினார். திருவாலங்காட்டை அடைந்த போது காரைக்காலம்மையார் தலையால் நடந்தபதி என்பதை அறிந்து அம்மண்ணை மிதிப்பதற்கு அஞ்சினார். திருநாவுக்கரசுப்பெருமான் உளவாரத்தொண்டு செய்த தலமாகிய திருவதிகை வீரட்டானத்தை மிதிக்க அஞ்சிய சுந்தரர் பெருமான் புறத்தே சித்த வட மடத்தில் தங்கி சிவபெருமானின் திருவடி தீட்சை பெற்றார். மாணிக்கவாசகப் பெருமானோ கண்ணப்பரின் அன்பினைப் போற்றிப் பாடினார்.

சமய குரவர்கள் நால்வரும் சிவசின்னங்க ளுக்கும், திருவைந்தெழுத்துக்கும் பெரு மதிப்பு அளித்து வந்தார்கள். சிவ சின்னமாகிய திருநீறை திலகவதியார் கொடுக்கப் பெருவாழ்வு வந்ததென அதை வாங்கி அணிந்த அப்பர் பெருமான், "திருவெண்ணீறணியாத ஊரைக் காடென" கூறுகிறார். திருஞானசம்பந்தர் திருநீறைப் போற்றி "திருநீறு செம்பை திடமே" என பாடினார்.

பாண்டியனின் வெப்பு நோயை திருநீற்று ப்பதிகம் பாடி மாற்றினார். சுந்தரரும் "முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்" என பாடினார். மாணிக்கவாசக சுவாமிகளும் "திருநீறிட்ட அன்பரோடு" என்றும், "திருநீறணிகிலாரைக் கண்டால் அம்ம அஞ்சுமாறே" எனப்பாடியுள்ளர். திருவைந்தெழுத்து குறித்து நாயன்மார்கள் நமச்சிவாயப் பதிகங்கள் பாடியுள்ளனர். சிறப்பாக சமயகுரவர்கள் "அன்பே சிவம்" என்று அன்பு நெறியில் பற்றுடையவர்களாக வாழ்ந்தார்கள். அப்பர் பெருமான் தொண்ட ராகவும் சம்பந்தர் பிள்ளையாகவும், சுந்தரர் தோழராகவும், மாணிக்கவாசகர் சீடராகவும் இறைவனுடன் உறவு கொண்டாடினார்கள். நாம் அனைவரும் நமக்கு ஏற்ற முறையில் வாழ்வு வாழ்வதற்கு சமய குரவர்கள் உயரிய வழிகளைக் காட்டியுள்ளார்கள்.

அவர்கள் காட்டிய அன்பு வழியில் நாம் வாழ்ந்தால் "அல்லல் என் செயும் அருவினை என் செய்யும்". இவ் அன்பெனும் அறநிலை யையே தமிழ் மறைகளுக்கெலாம் முதன்மையாக விளங்கும் உலகப் பொதுமறையாம் திருவள்ளுவப் பெருமான் தந்த திருக்குறளில், அதிகாரம் 8 இல்: அன்புடைமையில், குறள்:80 இல்

**"அன்பின் வழியது உயிர்நிலை அ/திலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு."**

அன்பின் வழி இயங்கும் உடம்பே உயர்நிலை பெறும் உடம்பாகும்; அன்பு இல்லாதவர் உடல் எலும்பைத் தோல் போர்த்த கூடேயாகும் என அறம் என்பது அன்பே என அறுதியிட்டு கூறுகி றார் .

@@@@@@

## வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து ஏன் அர்ச்சனை செய்கிறோம் ?

வெற்றிலை நம் உடலைக் குறிக்கும், தூல உடல், சூக்கும உடல் இரண்டையும் குறிக்க இரண்டு வெற்றிலை வைப்பது வழக்கம். காரண உடலைச் சேர்த்து மூன்று வெற்றிலையும் வைக்கலாம். நோயில்லாமல் நம் உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என வேண்டுவதே இதன் குறிக்கோள். பாக்கு செல்வத்தைக் குறிக்கும். இரண்டு வாழைப் பழங்களும் நாம் செய்யும் நல்வினை, தீவினை இரண்டையும் குறிக்கும். எனவே, ஆரோக்கியம், செல்வம், பாவ புண்ணிய விடுதலை ஆகிய மூன்றையும் வேண்டியே வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து அர்ச்சனை செய்கிறோம். இது மாயா மலத்தையும்ம் கன்ம மலத்தையும் நீக்குவதற்கு இறைவன் துணையை நாம் நாடுகிறோம் என்பதை உணர்த்தும் சுருக்கமாக தேங்காய், வெற்றிலை, பாக்கு, ஆரோக்கியம், செல்வம், பாவ புண்ணிய விடுதலை ஆகிய பயன்களைத் தர வேண்டும் என்பதேயாகும்,

# திருவாதவூரடிகள் புராணம்

## மீனாம்பிகை இரத்தினபிள்ளை

தண் ஆர் தமிழ் அளிக்கும் தென்பாண்டி நாட்டிலே மாணிக்கவாசகர் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள திருவாதவூரில் பிறந்தார். ஆதலால் அவருக்கு திருவாதவூரர் என்னும் பெயர் அமைந்தது. தந்தையார் சம்புபாதாசாரியார், தாயார் சிவஞான வதியார். அவருடைய கல்வி, கேள்வி அறிவு ஆற்றல் ஒழுக்கம் ஆகிய சிறப்புகளைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டிய மன்னன் வாதவூரரைத் தன் தலைமை அமைச்சராக நியமித்துக் கொண்டான். மேலும் அவருடைய ஆட்சித்திறமையை கண்டுகொண்ட மன்னன் அவருக்கு தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தை வழங்கினான்.

சோழ நாட்டுக் கடற்கரையில் நல்ல அரபிக் குதிரைகள் வந்து இறங்கி இருப்பதாய் தூதுவர் மூலம் அறிந்த பாண்டிய மன்னன் தலைமை அமைச்சராகிய வாதவூரரை அழைத்து ஏராளமான பொன்னும் பொருளும் கொடுத்து குதிரைகள் வாங்கி வருமாறு பணித்தான். குதிரைகள் வாங்கச் செல்லும் வழியில் திருப்பெருந்துறையை அடைந்தார். திருவருளே வடிவெடுத்து குருந்தமரத்தின் கீழ் அமர்ந்து இருந்த ஞானாச்சாரியன் வடிவில் அமர்ந்திருந்த இறைவனைக் கண்டு தொழுது அவரால் ஈர்க்கப் பெற்று, தான் அரிமர்த்தன பண்டிய மன்னனின் தலைமை அமைச்சர் என்ற எண்ணம் மறைந்தது. அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, குதிரைகள் வாங்கிக் கொண்டு சென்ற பணத்தை திருக்கோயில் மணிக்கும் சிவனடியார்க்கும் செலவிட்டார். தமது ஆவியும் உடலும் உடமை எல்லாமும் இறைவன் திருவடிக்கே அர்ப்பணித்தார்.

பாண்டிய மன்னனுக்குச் செய்தி எட்டியது. உடன் வருமாறு ஓலை அனுப்பினான். ஆவணி மூலத்தில் குதிரைகள் கொண்டு வருவோம். நீ முன்னதாக செல் என இறைவன் பணித்தார். மாணிக்கவாசகரும் அவ்வாறே செய்தார். அரசன் மகிழ்ந்தான். ஆவணி மூலநாள் நெருங்கிற்று. குதிரைகள் வரவில்லை.

அரசன் சினங்கொண்டான். மாணிக்கவாசகரை சிறையில் இட்டான். நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே என்ற உறுதியுடன் இருந்தார். ஆவணி மூலநாள் அன்று குதிரைகள் வந்தன. ஆலவாய் அண்ணலே குதிரைச் சேவகனாகியும், பரிவீரர் வானவராகவும் வேடம் தாங்கி வந்தார். பாண்டிய மன்னன் மனம் மகிழ்ந்தான். மணிவாசகரை சிறையில் இருந்து விடுத்தான். மன்னிப்புக் கேட்டான்.

வெம்பரியின் அண்ணலை வியந்து தமிழ் மாறன் அம்பொன்விலை இல்லதொரு அரும் கலை அளித்தான். விலை மதித்தற்கரிய அருமையாகிய அழகையுடைய பீதாம்பரம் ஒன்றை பரிசாகக் கொடுத்தான். எம்பரமர் செண்டின் மிசை ஏற்று நகை செய்தார். எம்முடைய சிவபெருமான் அதனைத் தமது சவுக்கால் ஏற்று புன்னகை செய்தார். காற்றென விரைவில் எய்தி கடிது தன் கரத்தில் வாங்கி போற்றிலன், முடியின் மீது புனைந்திலன். போற்றவும் இல்லை புனையவும் இல்லை. மன்னன் நெஞ்சிடை வெருட்சி கொண்டான். அது தேய நல் இயற்கை என்றே வண்டமிழ் வாதவூரர் மன்னனிடம் கூறினார். மன்னனும் சமாதானம் அடைந்தான். இறைவனின் திருவிளையாடல் அன்று இரவு குதிரைகள் எல்லாம் நரிகளாயின. அரசன் சினங்கொண்டான். மாணிக்கவாசகரை உச்சி வேளையில் வைகையின் சுடுமணலில் நிறுத்தி துன்புறுத்தினான்.

**தொல்லையோ இருவர் தேடும்**
**சோதியே யாது செய்வேன்**
**தில்லையோர் பரவ நின்ற**
**தெய்வமே யாது செய்வேன்**
**இல்லையோ கருணை நின்பால்**
**இன்றெனை அடிமை கொண்டாய்**
**அல்லையோ தமியேன் இன்னல்**
**அறிதியோ அரிந்திலாயோ**

சிவனை சிந்தையில் பற்றி உருகினார், அடியார் துயர் பொறாத இறைவன் கங்கையை வைகையூடு சென்று வாதவூரர் பேரிடர் தீர் என்று ஏவி விட்டார். வைகையில் வெள்ளம் பெருகியது.

மதுரைக்குள் வெள்ளம் பாய்ந்தது. கரைகள் உடைந்தது. கரைகளை அடைக்குமாறு குடிகளைப் பணித்தான். வந்தி என்ற பிட்டு விற்கும் ஏழை முதியவளுக்கு இரங்கி இறைவன் கூலி ஆளாய் வந்தான். மண்சுமந்தான். கொன்றை துன்றிய முடியின் மேல் மண் சுமந்தது உரைத்தல் செய்வாம்.

வந்திக்கு ஒருவரும் இல்லையே வந்தியின் பங்கை அடைப்பதற்கு. அடைக்காவிட்டால் மன்னனின் தண்டனைக்கு ஆளாக வேண்டுமே என வருந்தினாள். இறைவனே கூலி ஆளாக வந்தார். கூலியாள் வேண்டுமோ கூலியாள், எட்டிப் பார்த்தாள், தோளில் ஒரு மண்வெட்டி ஒரு கூடை, என்ன அழகு "எனக்கு கூலி ஆளாய் வருவியா?" "வருவேன் பாட்டி, எனக்கு முன்னுக்கு கூலி வேணும். எனக்கு இப்ப பசி. முன்னுக்கு பிட்டு தந்தால் அடைப்பேன்". பிட்டையும் சாப்பிட்டு விட்டு

மிச்சமான பிட்டையும் துணியில் முடிந்து கொண்டு வைகையை அடைந்தார். அவர் விளையாடிக் கொண்டு பிட்டு நன்றென்று சொல்லி பிறைமுடி அசைப்பார். கொட்டுடன் கவித்த கூடை கொண்டு நின்று ஆடல் செய்வார். ஓடுவார். இழைத்தவர் போல படுத்துத் தூங்குவார். பிட்டை உண்டுவிட்டு விளையாடிக்கொண்டு இருந்தார். சினங்கொண்ட அரசன் வந்தியின் கூலி ஆளை பிரம்பால் அடித்தான். அடித்ததும் அடித்தபோதில் அன்புடை அரிவை பாகம் கொடுத்திலர். துணுக்கம் எய்த மறைந்தனர்.

அந்த அடி எல்லா உயிர்கள் மீதும் பட்டது. அரசன் தன் தவறை உணர்ந்தான். கூலி ஆளாக வந்தது இறைவனே என எம்பெருமானை வணங்கினான். மணிவாசகரை தன் பிழை பொறுத்தருளுமாறு வேண்டினான். அவரும் தம் அமைச்சுப் பதவியை நீத்து பல திருத்தலங்களையும் வணங்கியவாறே தில்லை நகரை அடைந்தார். தில்லை அம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடும் நடராசப் பெருமானை வணங்கி அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே என்று பரவசம் அடைந்தார். முடிவற்ற பேரானந்த வடிவத்தை அழகிய தில்லையிலே கண்டேனே.

இறைவன் மணிவாசகரை ஆட்கொள்ள திருவுள்ளம் கொண்டு அந்தணன் வேடம் பூண்டு வந்து நீர் பாடுக நான் எழுதுவேன் என்றார். மணிவாசகரும் தாம் அருளிய திருப்பாடல்களை அவர் வாயிலாகவே சொல்லக்கேட்டு அதைதானே கைப்பட எழுதி மெய்தவ வாதவூரன் விளம்பிட "மன்றுள் ஆடல் புரிந்தவன் சிற்றம்பலத்தான் எழுதியது" என்று கைச்சாத்திட்டு பொன்னம்பலத்தே உள்ள தில்லை (பஞ்சாக்கரப்படியில்) அதாவது தில்லை திருவம்பலப்படியில் வைத்து மறைந்தார். மறுநாள் பூசை செய்ய வந்த தில்லை வாழ் அந்தணர்கள் சுவடியைக் கண்டு வியந்து ஆச்சரியப்பட்டு பின் விபரம் அறிந்து வந்து மணிவாசகரைப் போற்றினர். இதன் பொருள் என்ன என்று கூறவேண்டும் என்று அவரைக் கேட்டனர். வாருங்கள் பொன்னம்பலப் பொது எதிரே காட்டுவேன் எனக் கூறி அனைவரையும் அழைத்துச் சென்று இதன் பொருள் இந்த பொன்னம்பல கூத்தப்பிரானே என்று காட்டி ஓடிச்சென்று நடராசப்பெருமானின் திருவடி சோதியில் இரண்டறக் கலந்தார்.

ஆண்டு தோறும் ஆனித் திங்கள் மக நட்சத்திரம் அவரின் நினைவு நாள் ஆகும்.

# திருவாசகம்:

திருவாசகம் 51 பதிகங்களையும் 656 பாடல்களையும் கொண்டது. சிவபுராணம், கீர்த்தி திரு அகவல், திரு அண்டப் பகுதி, போற்றி திரு அகவல், சதகம் ஆகிய அருட்பாக்களாகும். தீவிர பக்தியால் போற்றிப் பொழிந்த தேன் ஊறும் மதுர வாசகங்களே திருவாசகம் என்னும் தேன் ஆகும்.

திருமுறைகள் ஐந்தெழுத்து மந்திரத்தை முதலாகக் கொண்டு பாடப்பட்டது திருவாசகம் ஒன்றுதான். திருமுறைகளுள் சிறப்பு வாய்ந்தது திருவாசகம். ஏன் என்றால் எம்பிரானால் எழுதப்பட்டது. திருவாசகத் தேன் மனிதனை வாழவைக்கும் மாமருந்து. கல் போன்ற மனத்தையும் நீராக ஓடவைக்கும். பொன்னம்பலத்திலே மணிவாசகரே இவற்றைப் பாட இறைவனே இதன் அருமையை உணர்ந்து எழுதி அருளினார் என்றால் இதன் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா?

திருவாசகம் அது தெய்வ வாசகம்:

**திருவாதவூரர் சொல் அம்பலவர் தாம் எழுதும்**
**திருவாசகத்தை தெளிந்தால் - கருவாம்**
**பவ கதியும் நீங்கிப் பரமன் அருளாலே**
**சிவகதியும் உண்டாம் சிவம்.**

**தொல்லை இரும் பிறவி சூழும் தளை நீக்கி**
**அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறி அளிக்கும் வாதவூரர் எங்கோன்**
**திருவாசகம் என்னும் தேன்.**

தொடர்ந்து வருகின்ற பிறவித் தளையை நீக்கும் துன்பங்களை நீக்கும் "மருவா நெறி அளிக்கும் முத்தி மோட்சம் அளிக்கும்" திருவாசகம் என்னும் தேன்.

திருவாசகத்திற்கு மேல் ஒரு வாசகமும் இல்லை. திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார். உருகாதார் யாரும் இலர். ஆனபடியால்தான் திருவாசகத்தை தேன் என்று கூறுவார்கள். தேனுடைய இயல்பு, சுவை குன்றாது, பழுதடையாது, தன்னுடன் சேர்ந்தவற்றையும் பழுதடைய விடாது. ஆகையினால் ஒவ்வொரு சைவ பெருமக்களும் திருவாசகத்தை ஓதி உணர்தல் இறை அருள் பெறக் கூடிய விசயமாகும்.

## Ottawa Sivan Temple - Volunteer Service

This year a number of young men did selfless service for Cleaning in and out of Temple, Painting the Temple, Grass cutting, Decorations etc. We thank all groups of young men including Nepean Cricket Club (NCC) members. May Lord Sivan & Ambal bless you all!

**- Board of Directors, Ottawa Sivan Temple**

# எண்குணத்தான்

## சண்முகம் நடராசா

முழுமுதற் கடவுளாகிய எம்பெருமான் சிவனுக்கு சிறப்புரிமையாக எண்குணங்கள் கூறப்படுகிறது. எண்குணத்தானாய எம்பெருமான் அடிகளை நாம் எல்லோரும் தாள் பணிந்து வணங்க வேண்டும் என்பதும் கீழ்க்காணும் குறளால் காணப்படுகின்றது:

**"கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை"** - (குறள்-9)

சைவாகமத்திலும் இவ் எண்குணங்கள் பேசப்படுகின்றது. திருமுறைகளிலும் "எட்டுவான் குணதீசனெம்மான்தனை" எனவும் "எட்டுச் சொலாமவரீதல் பெருங்குணம்" எனவும் கூறப்படுகின்றது. "முடிவிலாற்றலை, தன்வயத் தினை, முற்றுணர்ச்சியை, மடிவிலட்சியை, தூயமேனியை, மற்றியற்கையுணர்ச்சியை, படியிலாவியல்பாக நீங்கிய பாச நோயை, வரம்பிலின்புடையை, யுன்னடியோங்களென்று முனக் கடைக்கல மையனே" என வகுத்துக் கூறப்படுகின்றது காஞ்சி புராணத்தில்.

அவ் எண்குணங்களாவன:

**1. தன் வயத்தனாதல் :** தான் ஒரு பொருளிலும் வயப்படாமல் எல்லாம் தன் வயமாக இருத்தல். உலகம் அவனுருவில் தோன்றி ஒடுங்கிடும் ஆதலால் "விஸ்வகரணம்" என சுருதி கூறுகின்றது. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது". சர்வ தத்வாதிபதியும் அவனேயாதலால் தன் வயத்தனாதல்.

**2. தூய உடம்பினனாதல் :** இறைவன் அருளேறு மேனியாகி, ஏனைய ஒளிகளெல்லாம் தமது திருமேனி ஒளியில் விளங்க விரும்புவனாதலால் தூய உடம்பினனாதல் மேலும் மாயாவிகார மெய்தி கர்ப்பத்தில் சென்று துன்பப்படாதவன், பசிநோய், மதம் மாச்சரியம் முதலிய உயிர்களுக்குரிய குணமில்லாதவன், நிர்மல தேகி என வேதம் உரைப்பதாலும் தூய உடம்பினனாதல் ஆகிறான்.

**3. இயற்கை உணர்வினனாதல் :** கருவிகள் ஒன்று இல்லாமல் அறிவிப்பாரின்றி எக்காலத்திலும் திரிவின்றி யாவும் ஒருங்கே அறிந்தாங்கு அறிந்து நிற்கும் சித்துப் பொருளாதலால் இயற்கை உணர்வினனாதல் இறைவன் ஆகிறான்.

**4. முற்றுணர்தல் :** பண்ணும் ஓசையும் போலவும், விறகிற் தீ போலவும், பாலில் நெய் போலவும் பிரிவின்றி உலகம் யாவிலும் வியாபகமாய் (சர்வ வியாபி) எல்லாம் முழுமையாக அறியும் குணத்தவன் ஆகின்றான்.

**5. இயல்பாகவே பாசங்களினீங்குதல் :** குருமேனி தரித்து கல்லாலமரநிழலிலே இருந்து நந்தி முதலான முனி கணத்தவருக்கு ஞான உபதேசஞ் செய்து பாசங்களை நீக்கி முத்தி இன்பம் அருளிய ஆற்றலாலே இயல்பாகவே பாசங்களினீங்குதல் பாசங்களுள் கட்டுப்படாமலும் கட்டுண்டிராமலும் ஆன்மாக்கள் தன்னடி நிழலில் சரணடையும்போது பாசங்களை நீக்கி முத்தியின்பம் கொடுக்கிறான்.

**6. பேரருளுடைமை :** இயற்கையாகவே பரம கருணாநிதியாக விளங்கும் இறைவன் உயிர்களுக்கு இன்பதுன்ப நுகர்ச்சிக் கூறுபாட்டால் அதற்குக் காரணமாகிய இருவினைகளை நீக்கி அருள்வதால் விருப்பு வெறுப்பு இல்லாமல் யாவற்கும் இன்பம் அளிப்பவனாதலால் பேரருளுடைமை ஆகிறான். மற்றவர்களுக்காக தான் நஞ்சை உண்டவன்.

**7. முடிவிலாற்றலுடைமை :** வேத ஆகமங்களின் நெறியில் நடப்பவர்கட்கும் நடக்காதவர்க்கும் அவரவர் முறைக்கு ஏற்றவாறு சுக துக்கங்களை அளித்து நிற்பதால் முடிவிலாற்றலுடைமை யாகுறான். மேலும் சர்வ சங்காரகாலத்தில் எல்லாப் பொருள்களிலும் வியாப்பியமாய் இருப்பவன்.

**8.வரம்பிலின்பமுடைமை:** சார்ந்ததன்வண்ணமாய் நிற்கும் ஆன்மாக்களை எல்லாம் புண்ணிய மேலீட்டால் பக்குவமெய்தி சத்தி பதியப் பெற்று வினையொப்புவாய்ந்து சற்குரு உபதேசம் பெற்று துவித பாவனையை கைவிட்டு, சிற்றறிவு நீங்கி ஞானக் கண்ணினால் சிவனை ஆன்மாவில் கண்டு, சிவனோடு ஐக்கியப்பட்டு நிற்கையில் ஆனந்தமாகி முடிவிலாப் பேரின்பத்தை அவ்வான்மாக்களுக்கு நுகர்விப்பதால் வரம்பிலின்பமுடைமை ஆகிறான். எல்லா உயிர்க்கும் இன்பம் செய்தலால் சங்கரன் சம்பு எனப் போற்றப்படுகிறான்.

@@@@@@@


சிவசிவ

























ஈழத்தின் சைவ மணம் கமழும் திருக்கோணேச்சரம்

# ஈழத்தின் சைவ மணம் கமழும் திருக்கோணேச்சரம்.

திருமதி பிருந்தா பாஸ்கரன்

மாதுமையம்மை உடனுறை கோணைநாதர் உறையும் திருக்கோணேச்சரம், கடலோரம் அமைந்த குன்றின் மீது இயற்கை வனப்புக் கொட்டிக் கிடக்கும் சூழலில் அமைந்து விளங்குகின்றது.

"குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை" (கடல் ஆர்ப்பரிக்க, முத்துக் கள் விளையும் திருக்கோணமலை) என்று ஏழாம் நூற்றாண்டிலேயே அத்தலத்தைப் புகழ்ந்து பாடியிருக்கிறார் சம்பந்தப் பெருமான். அருணகிரி நாதரின் "விலைக்கு மேனியில்" எனும் திருப்புகழ் இத்தலத்து முருகனாரையே போற்றுகிறது. கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலைத் "திருக்கோணேச்சரம்",

இலங்கை மணித் திருநாட்டின் கீழ்பால், "தென்கயிலை" எனப் போற்றப்படுவதோடு இத் திருத்தலம். தட்சண கைலாசம், மச்சகேஸ்வரம் என்ற மறு பெயர்களாலும் அழைக்கப்பட்டது. ஆதிசேடனும், வாயு பகவானும் தங்கள் வலிமையைக் காட்ட முயன்று, ஆதிசேடன் மகா மேருவின் சிகரத்தை மூடிக்கொள்ள, வாயு பகவான் இலங்கையின் கிழக்குக் கரை யோரமாக விழுந்து திருகோணமலையாக உருவாகியது என்பது புராணத்திலிருந்து கிடைக்கும் செய்தியாகும்.

இமயமலையின் ஒரு பகுதியே கோண பர்வதம் என்ற நம்பிக்கை காரணமாக கோணேச்சரத்திற்கு தட்சண கைலாசம் என்ற பெயர் உருவாகியது. திருமால் மச்சாவ தாரத்திலே தட்சணகைலாசத்தை அடைந்து தனது மீன் உருவத்தை விட்டு நீங்கி மகேஸ்வரனை வணங்கியதால் மச்சகேஸ்வரம் என்ற பெயரும் உருவாகியதாக தக்ஷண கைலாச புராணம் கூறுகின்றது அத்தோடு தாட்சாயணியின் ஒட்டியாணம் விழுந்த "சங்கரி" எனும் சக்திபீடம் இதுவே என்பது சிலரது கருத்து.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் போன்ற நாயன் மார்களால் போற்றி பாடப்பட்டதும், திருமூல நாயனாரால் "சிவபூமி" எனப் போற்றப்பட்டதுமான திருக்கோணேச்சரத்தலம் இன்று நேற்று தோன்றியது அல்ல வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்டும், திரிக்கப்பட்டும், நிருபிக்கப்பட்டும் கூறினாலும் ஸ்ரீ மாதுமை அம்பாள் உடனுறை கோணேச்சரப் பெருமானின் அருட் சுரப்பு எப்போது என்று பொழியத் தொடங்கியது என்பது இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது.

"இராவணன் மேலது நீறு" என திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். இராவணனால் பூஜிக்கப் பெற்ற திருத்தலமிது, இராவணன் தன் தாய்க்கு நீத்தார்கடன் செலுத்திய "கன்னியா வெந்நீ ரூற்றுக்கள்" இத்தலத்தின் அருகே உள்ளன. மகாபாரதம், இராமாயணம் இந்த இரண்டிலும் இராமாயணம் முந்தியதாகும் மகாபாரதம் பிந்தியது. மகா பாரதம் கலியுகம் பிறப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை, கலியுகம் கி.மு 3102 ம் ஆண்டு மாசி மாதம் 18 ம் நாள் தொடங்கியது எனக் கூறுவர், பாரதப்போர் துவாரயுகத்தின் இறுதியுகத்தில் நடந்தது என்றும் அது கி. மு 3100 - 3050 இற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந் திருக்கலாம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளனர். மகாபாரதம் கி.மு 3100 ம் ஆண்டென்றால் அதற்கு முந்திய இராமாயணம் அப்பொழுது வாழ்ந்த இராவணன், அவனால் வழிபடப்பட்டு வந்ததாகக்கூறும் திருக்கோணேச்சரத்தலம் என்பவைகள் எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்தன என்பதை இதன்மூலம் உணர்ந்து கொள்ளல் வேண்டும் கி.மு 4732 ம் ஆண்டுகளில் திருக்கோணேச்சரத்தலம் மிகுந்த சிறப்பு வாய்ந்த ஒரு திருத்தலமாக திகழ்ந்தது என்பதை வரலாற்று சான்றிதழ்கள் நிரூபிக்கின்றன.

ஏறக்குறைய 9000 ஆண்டுகள் பழமை வாய்ந்த புண்ணியத்தலமிது. இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்கள் கூட 9 ம் நூற்றாண்டுகளில் இவ் ஆலயத்திற்கு உதவி அளித்ததோடு வழிபாடும் செய்து வந்துள்ளனர். அத்தோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னர்களும் கண்டி மன்னர்களும் கோட்டையை ஆண்டவர் களும் கூட இப் புண்ணிய தலத்தை வழிபாடு செய்துள்ளமைக்கு சான்றுகளாக கல்வெட்டுகள் உண்டு.

7ம் நூற்றாண்டுகளில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் வாழ்த்த ஞான சம்பந்தரினால்இவ்வாலயத்திற்கு தேவாரப் பாமாலை சூட்டப்பட்டது என்றால் பல்லவராட்சிக்காலத்தில் இப் புண்ணியதலம் மிகவும் சிறப்பு பொருந்தியதாக இருந்திருக்க வேண்டும். சோழராட்சிக்காலத்திலும், குளக் கோட்ட மன்னர் காலத்திலும் இவ்வாலயம் புனருத்தானம் செய்யப்பட்டதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளன. இதற்கு கோணேசர் கோட்டை வாயிலில் இன்றும் காட்சி தரும் குளக்கோட்ட மன்னன் கல்வெட்டு சான்றாக உள்ளது. இவனது ஆட்சிக்காலத்தில் திருக்கோணசர் ஆலயம் பல திருப்பணிகள் செய்யப்பட்டு சுடர்விட்டுப்பிரகாசித்தது.

ஆழிப்பேரலைகளில் உண்மையான கருங்கல்லி னால் ஆன ஆலயம் கடலினடியில் புதையுண்டு போனாலும் கூட அதன் அழியாத்தன்மை இப்போதும் கடலுக்குள் அழிந்துள்ளதை 1956 ல் மேற்கொள்ளப்பட்ட மேற்குலகச் சுழியோடிகளின் ஆராய்ச்சிக்குறிப்புகளும், புகைப்படங்களும் நிருபித்து நிற்கின்றன. அத்தோடு போத்துக்கீசர் படை எடுப்பின்போதும் அழித்தும் ஒழித்தும் உள்ளனர், ஆனால் காலத்திற்க்கு காலம் ஏற்படுத்திய அழிவுகள் கோணேச நாதர் ஆலயத்தை சேதப்படுத்தியதே தவிர அவரது பெருமையையும், அருளையும், கருணையையும் அழித்துவிட முடியவில்லை.

திருகோணமலையைச் சார்ந்த பல கிராம ங்களான மல்லிகைத் தீவு, கிளிவெட்டி, தம்பலகாமம், மூதூர், கந்தளாய், கன்னியா போன்ற இடங்களில் இவ்வாலயத்திற்கு பணி செய்வதற்குரிய வேலையாட்கள் குடியமர்த்தப்பட்டு நாள் தோறும் ஆறுகாலப் பூசைகளுடன், நித்திய நைவேத்தியக் கிரியைகள் இடம்பெற்றுள்ளன.

மல்லிகைத் தீவிலிருந்து இவ்வாலயத்திற்குத் தேவையான மலர்கள், திரியாயிலிருந்து திருவிளக் கெரிப்பதற்குத் திரி, மூதூரிலிருந்து அபிசேகத்திற் குரிய தயிரும், பாலும், தேனும் கொண்டுவந்து ஸ்ரீ மாதுமை அம்பாள் சகிதம் திருக்காட்சி கொடுத்து அடியவர் பிணி தீர்க்கும் எம்பெருமானுக்கு ஆறுகாலப் பூசைகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்ற நிறை பெருமையினாலேயே பாடல் பெற்ற திருத்தலமாக அமைந்தது.

நாயன்மார்கள் வாழ்ந்த காலத்தில் தமிழ் நாட்டில் சைவம் சுடர் விட்டுப் பிரகாசித்தது சைவவளர்ச்சியில் அரசர்கள் குறுநிலமன்னர்கள் குடிமக்கள் யாவரும் அக்கறை கொண்டு செயல்ப்பட்டனர். அந்தக்கால கட்டத்தில் கோணேசர் ஆலயத்தின் பெருமை தமிழ் நாடெங்கும் பரவியிருந்தது, தமிழ் நாட்டிலிருந்து மட்டுமல்லாமல் வேறு பல நாட்டிலிருந்தும் பல்லாயிரக் கணக்கானோர் இங்கு வந்து வழிபட்டு பேரின்ப நிலை பெற்றனர். பல பொக்கிஷங்களை உள்ளடக்கிய தலமிது. மாணிக்கமும், முத்தும், பவளமும், சந்தணமும், அகில் போன்றவைகளும் இவ்வாலயத்தைச் சுற்றி நிறைந்திருந்தன. இவ்வாலயத்தை சுற்றியிருந்த சூழல்யாவும் "குடிதனை நெருக்கமாக" சைவம் தழைத்தோங்கிய சூழலாக அமையப்பெற்றிருந்தன.

இலங்கை சிவ பூமி எனப்பெயர் பெற்றமைக்கு திருக்கோணசர் ஆலயமே மூலகாரணம் எனக்கூறலாம். கடல் சூழ்ந்த கோணமாமலை அன்றுபல நிலப்பரப்புக்களுடன் தொடர்பு பட்டிருந்தது. நாற்பது கிராமங்கள் இவ்வாலயத் துடன் நெருங்கியிருந்து இறைபணி செய்து சைவ மணம்கமழ்ந்த கிராமங்களாக சகல அனுக்கிரகங்களுடனும், செல்வச்செழிப்புடனும் திகழ்ந்தன. நூற்றுக்கணக்கான கும்பாபிஷேகங் களைக் கண்டு மனம் குளிர்ந்த இறையருள் கூடிய ஆலயமிது. இதன் அருட்பிரகாசம் நமது நாட்டில் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளிலும் பரவியிருந்தது.

எமக்கும் எவ்வித இடையூறுகளும் வராமல்

காத்து நின்று அருள் காக்க வேண்டுமென கோணேசநாதர் திருவருளை வேண்டி நிற்போம்.

**"தாயினும் நல்ல தலைவரென்றடியார்**
**தம்மடி போற்றிசைப்பார்கள்**
**வாயிலும் மனத்தும் மருவிநின்றகலா**
**மாண்பினர் காண்பல வேடர்**
**நோயிலும் பிணியும் தொழிலர்பா நீக்கி**
**நுழைதரு நூலினர் ஞாலம்**
**கோயிலுமஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த**
**கோணமாமலை அமர்ந்தாரே."**

அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனருளைப் பெறுவோமாக.

@@@@@@@

# திருவெம்பாவையும் திருவாதிரை நோன்பும்

திருமதி விஜயராணி மதியழகன்

மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகத்தில் அதன் நடுநாயகமாகத் திகழும் ஒரு பகுதியே திருவெம்பாவை. திருவெம்பாவை இருபது பாடல்கள் கொண்டது. ஒவ்வொரு பாடலும் 'ஏலோரெம்பாவாய்' என முடியும். சைவசமயத்தவர் வீடுகள் அனைத்திலும் மார்கழி வைகறைப் பொழுதில் ஓதப்படுவது. மார்கழித் திங்களில் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன் திருவெம்பாவை நோன்பு தொடங்கி திருவாதிரையன்று முடிவுபெறும். இளம்கன்னிப் பெண்கள் இந்த நோன்பிற்கு உரியவர்கள். இவர்கள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்ப வைகறைப் பொழுதில் வீடுதோறும் செல்வர். அனைவரும் துயிலெழுந்தபின் ஒன்றுசேர்ந்து நீர்நிலைக்குச் செல்வர். அம்மை அப்பர் புகழ் பாடிக்கொண்டு நீராடுவர். கன்னிப் பெண்கள் மட்டுமன்றி பெண்களும் ஆண்களும் திருவெம்பாவை ஓதும் நெறியைக் கடைப்பிடித்து நோன்பிருப்பர்.

"சக்தியை வியந்தது" என்பது திருவெம்பாவைக்கு உள்ளுறை பொருள் என்று சான்றோர் கூறுவர். ஐந்தொழில் இயற்றும் இறைவன் இயல்பை உணர்த்தி அவன் திருவடியாம் கௌரிதம்மை ஆட்கொள்ளும் திறம் இயம்புதல் மார்கழி நீராடல் எடுத்துரைக்கின்றது. மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நிறைமதி நன்னாளில் மேற்கொள்ள ப்படுவது திருவாதிரை நோன்பு. சிவபெருமானு க்கு மிக உகந்த விரதம். சிவபெருமான் ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறப்படுவதுண்டு. இந்நாளில் நடராஜப் பெருமானுக்குச் சிறப்புக்கள் நடைபெறும். இந்நாளில் ஆரூத்ரா தரிசனம் பார்ப்பதற்கு சிவாலயங்களுக்கு மக்கள் செல்வர். ஆரூத்ரா என்பது ஆதிரை. நடராஜர் தனது நடனத்தை பதஞ்சலிக்கும், வியாக்கிரபாதருக்கும் ஆடிக் காட்டியது இந்த திருவாதிரை நட்சத்திரத் தன்றுதான். நடராஜருடைய ஆட்டம் உலகம் இயங்குவதையே குறிக்கின்றது.

அணுக்கள் முதல் அண்டங்கள் வரை ஒழுங்குமுறை தவறாமல் ஆடுகின்றன.இந்த நடனத்தில்தான் வேதங்கள், ஆகமங்கள், கீதங்கள், கலைகள் முதலான சகலமும் உதயமாகின்றது.

நம்மை எல்லாம் ஆட்டிவைக்கின்றவன் தானும் ஆடிக் கொண்டிருக்கின்றான். அவன் ஆடுவதால் தான் உலகம் ஆடிக் கொண்டிருக்கின்றது. அவனுடைய அற்புதக் கூத்தே உலக திருஷ்டி. இந்த நடனக் கோலத்தை பல பக்திமான்கள் கண்டு ஆனந்தமடைந்துள்ளனர். திருநாவுக்கரசர் தான் கண்ட கோலத்தை,

**"குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயில் குமிண்சிரிப்பும்,
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும் ,
இனித்தமுடைய எடுத்த பொற்ப்
பாதமும் காணப்பெற்றால் ,
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே"**

என்று அழகாகப் பாடியுள்ளார்.

நடராஜர் நடனத்தை திருமூலர், காரைக்கால் அம்மையார், கல்லாடர், கபிலர், பதஞ்சலி, வியாக்ரமபாதர் ஆகிய அடியார்கள் பலகோணங்களில் கண்டு பரவசமடைந்திருக்கின்றார்கள் திருமூலர்தான் இருந்த இடத்திலிருந்தே இதை அனுபவித்தார். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் "அன்பர்களே! ஈசன் திருநடனங் காணுங்கள் காணுங்கள்" எனக் கூவி அழைக்கின்றார். பின்வரும் பாடலில் .....

**"கூற்றிருக்கும் மடலாழிக் குரிசின் முதலோர்
இறைஞ்சக் கொழுந்தேன் பில்கி
ஊற்றிருக்குத் தில்லைவனத் தசும்பிருக்கும்
பசும் பொன்மன்றத்து ஒருதாள் ஊன்றி
வண்டுபாடச் சுடர் மகுடமாப் பிறைத் துண்டமாடப்
புலித்தோலுமாடப் பகிரண்டமாடக் குலைந்து அகிலாடக்
கருங்கொண்டலோடும் குழற்கோதையோடும் கறைக்
கண்டனாடுந் திறன் காண்மினோ "**

@@@@@@@

# சிவனருள்
## (ஒட்டாவா பக்தை ஒருவரின் அனுபவம்)

**"நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே..."**

- மாணிக்கவாசகர்.

**"நாயேனையும் இங்கு ஒரு பொருட்டாக நயந்து வந்து நீயே நினைவின்றி ஆட்கொண்டாய், நின்னை உள்ள வண்ணம் பேயேன் அறியும் அறிவு தந்தாய்..."**

-அபிராமிப் பட்டர்

மேலுள்ளவாறு பெரியவர்கள் கூறிய வண்ணம் அருளை வாரி வழங்கும் இறைவனின் திருத்தலம் இங்கே நமதருகே இருப்பது ஒரு கிடைத்தற்கரிய பெரும் பேறு. திருமறைகளிலே கூறிய வண்ணம் சிவனருளைப் பெறுவது இக் காலகட்டத்திலே சாத்தியமா என ஐயமுறும் நெஞ்சங்களுக்காக இந்த கட்டுரை...

சிவ வழிபாடு அதிகம் தெரியாத ஆனால் இறைவன் மேல் அதீத நம்பிக்கையுடைய ஒரு சாதாரணமான அடியேன் யான். வைத்தீஸ்வரனை பிரதோஷ காலத்திலே விரதமிருந்து வழிபட்டேன். அந்த நற் பயனால் திருவண்ணாமலையை ஊனக் கண்களால் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. திருவண்ணாமலை சென்று மண்ணிலே கால் பதித்தவுடன் என் முன்னால் ஒரு பித்தன் போல் இருந்த ஒருவர் வந்து பின் வருமாறு கூறினார்

**"தெய்வம் என்பது ஒன்று உண்டானால், நான் ஏன் அதைத் தேடிப்போக வேண்டும்? அது வல்லவோ எனைத் தேடி ஓடி வர வேண்டும். அதை விடுத்துச் சிலையைத் தரிசிப்பதில் பயன் என்ன?"**

கேட்டதும் அர்த்தம் புரியாமல் நின்றேன். சொன்னவரை திரும்பிப் பார்த்தேன். சொல்லிய படியே போய்க்கொண்டே இருந்தார்.

இதுநாள் வரையில் இறைவனை வழிபட்டு இருந்தாலும், இக்கூற்றை முழுதாக நம்பும் பக்குவம் அப்போ எனக்கு இருக்கவில்லை. கற்ற கல்வியும் வாழும் சமூகமும் இப்படியொரு கருத்தை என்னுள் வளர்த்திருக்கவில்லை.

ஆனால் அவர் சொன்னவை பொய்க்கவில்லை. இறைவன் மானிட ரூபத்தில் என்னையும் நோக்கி உண்மையாகவே ஓடி வந்தது ........ குரு வடிவில்

நவக்கிரக கோவிலில் நவக்கிரகங்களுக்கு அருகில் அமர்ந்து, என்னையே உற்று நோக்கிய குருவின் பார்வை என்மேல் படிந்தது ஒரு சில நொடிகள் மட்டுமே. என் சிற்றறிவுக்கு அப்போ புரியவில்லை அப்பார்வையின் பயன். ஆனால் போகப் போக என்னுள்ளும் புறத்திலும் நிகழும் மாற்றங்கள் திகைப்பை உண்டு பண்ணின. சிவன் கருணை கொண்டு பார்த்த ஒரு நொடி, என் வாழ்வின் திசையை மாற்றியது என்றால் மிகையல்ல.

**நாயன்மார்கள் பலரும் பாடிய வண்ணம் சிவனருள் எம் எல்லோர் மீதும் எபோதும் ஒரே மாதிரியாக வீசிய வண்ணமே இருக்கிறது. அவன் அருளால் மட்டுமே சிவதிருத்தலம் இங்கே உருவாகி நாம் எல்லோரும் வழிபட்டு பயன் பெறும் வண்ணம் அமைந்திருக்கிறது. அவன் கருணையை இனம் கண்டு வாழ்வின் பிறவிப்பெரும் பயனைப் பெறுவோம்.**

**அடுத்துவரும் சந்ததியினருக்கு கதைகளினுடே மட்டும் கூறாமல் வாழ்க்கை நிகழ்ச்சிகளினுடே யதார்த்த பூர்வமாக அவன் கருணையை எடுத்து காட்டுவோம்.**

சிவனை வழிபட ஏற்ற வகையில் இந்த வைத்தீஸ்வரன் ஆலயத்தை நிர்வகித்து வரும் அனைத்துத் தொண்டர்களுக்கும் எம் எல்லோரினதும் இதய பூர்வமான நன்றிகள். ஆலயம் மேன்மேலும் வளர்ந்து நம் எல்லோர் வாழ்க்கையிலும் சுபீட்சத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

@@@@@@

# அருள்மிகு தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமியின் மகிமை

# அதிசயம் ஆனால் உண்மை

திருமதி ராஜி தங்கேஸ்வரன்

சைவசமயத்தவரின் முழுமுதல் கடவுளெனப் போற்றப்படுபவர் எங்கள் சிவபெருமான். நாம் எத்தனை கடவுளை வணங்கினாலும், அவை அனைத்தும் எம் இறைவன் சிவனையே சென்றடைகிறது என்பது ஐதீகம்.

நான் எனது சிறு பராயம் தொட்டே வணங்கி வருவது எமது ஊரில் உள்ள எல்லாள மன்னனால் கட்டுவிக்கப்பட்டு பின்பு புதையுண்டு எம் முன்னவர் காலத்தில் அகழ்ந்தெடுக்கப் பட்ட தான் தோன்றி ஈஸ்வரனான "சிதளாம்பிகா சமேத சிவபுரநாதரையே". ஆனால் நான் எமது ஊரைவிட்டு வெளியேறி பல நாடுகள், தேசங்கள் அலைந்து கடைசியில் கனடா வருவதாக முடிவெடுத்து வரும் வழியில், 'மெக்சிகோ" எனும் நாட்டில் பிடிபட்டு ஜெயிலில் இருந்து வெளியில் வந்து மீண்டும் பயணம் தொடர முடியாத நிலையில் வெளியில் போக முடியாமல் ஓர் அறையில் மூன்று மாதங்கள் இருக்க வேண்டிய நிலை வந்தது. அச்சமயம் கௌரி விரதம் ஆரம்பமாகியது. நான் அந்த விரதம் பிடிப்பதுண்டு.

அங்குள்ளவர்கள், "நீ விரதம் பிடிக்க வேண்டாம். ஏனெனில் இனி நீ பயணம் தொடர்வதானால் நான்கு நாட்கள் இரவு பகலாக நடக்க வேண்டி வரும். நீ விரதம் இருந்தால் நடக்க மாட்டாய்" எனக் கூறினார்கள். நான் அதைக் கேட்காமல் விரதம் பிடித்தேன். (ஒரு வேளை மட்டும் சிறிது சோறு மட்டும் சாப்பிட்டு). 21ம் நாள் இரவு எனது சிவனை நினைத்து அழுதுவிட்டுப் படுத்தேன்.

அன்று இரவு எனது கனவில் "நானும் எனது மகளும் இன்னும் ஐந்து பேரும் ஒரு குளக் கரையால் நடந்து செல்வது போலவும், அக்கரையில் ஓர் "ஐந்து தலை நாகம்" படம் எடுத்தபடி நிறபதாகவும்; நாங்கள் அதைப் பார்த்ததும் பயத்தில் ஓட அந்நாகம் எம்மை பின் தொடர்ந்து அழைப்பது போலவும், நான் திரும்பிப் பார்த்துவிட்டு எனது மகளிடம் சொல்கிறேன்" "நாகம் எங்களைத்தான்..... அழைக்கிறது. வா திரும்பிப் போவம்" என்று கூறி நாம் இருவரும் திரும்பிப் போக,.........

அந்த நாகம் எங்கள் இருவரின் தலையிலும் தனது படத்தை வைத்து ஆசீர்வதிக்கிறது. எம்முடன் வந்தவர்கள் அதைப் பார்த்துவிட்டு திரும்பி வந்து தங்களையும் ஆசீர்வதிக்கும்படி கேட்க அது உடனே படத்தை சுருக்கிவிட்டு தனது இருப்பிடம் சென்றுவிட்டது. இவ்வாறு கனவு கண்டு திடுக்கிட்டு விழித்துப் பார்த்தால் நான் கண்டது கனவு என அறிந்தேன்.

எனக்குச் சிறு வயது முதல் என்ன நடக்க இருந்தாலும், ஏதோ ஒரு வகையில் முன்கூட்டியே கனவில் காட்டிவிடுவது நிஜம். நான் ஏதோ நல்லது நடக்க இருக்கு என்று மகளிடம் மறுநாள் கூறினேன்.

மறுநாள் இரவே எமது பயணம் தொடர்ந்தது. நான்கு நாட்கள் நடந்து அமெரிக்கா வந்து சேர்ந்தோம். நாம் காட்டுக்குள் நடந்து வெளியாகும் போது எம்மை பொலீஸ் சுற்றி வளைத்துப் பிடித்து விட்டது. எம்முடன் வந்த ஐவரும் எங்கள் இருவரையும் விட்டுத் தாம் தப்பி ஓடி விட்டனர். எம்மைப் பிடித்த போலீசார் மீண்டும் எம்மைச் ஜெயிலில் அடைத்து விட்டனர். எம்மை அடைத்துவிட்டு, எம்முடன் வந்தவர்களைத் தேடி இரவுக்குள் பிடித்துவிட்டனர்.

இரவு விசாரணையின்போது, எம்மை நாட்டுக்கு அனுப்பப் போவதாகக் கூறினார்கள். எனது மகளுக்கு "ஸ்பானிஷ்" பாஷை கதைக்கத் தெரிந்ததால் எமக்கு எமது நாட்டுக்கு போக முடியாத நிலையை விளக்கிக் கூறியதால், எம்மைப் பதினைந்து நாட்கள் வைத்து விசாரணை நடத்திக் கனடாவுக்குள் அனுப்பி வைத்தார்கள். எம்முடன் வந்தவர்களை நாட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

நாம் இருவரும் கனடா வந்து சேர்ந்ததும் ஒட்டாவாவில் உள்ள எனது சகோதரியின் வீட்டுக்கு வந்தோம். எனது தங்கை கூறினார், "நீங்கள் நல்ல படியாக வந்து சேர்ந்தால், முதன் முதல் வைத்தீஸ்வர நாதரிடம் கூட்டி வருவதாகவும், வருடா வருடம் உன் மகள் பால் செம்பு எடுப்பதாகவும்,

நீ என்னுடன் சிவராத்திரி விரதம் கோயிலிலேயே இரவு முழுக்க இருந்து நித்திரை முழித்து பூஜை பார்ப்பதாவும் நேர்த்தி வைத்தேன். வெளிக் கிடுங்கோ கோவிலுக்குப் போவோம்" என்றார்.

நானும் மகளும் முழுகி வெளிக்கிட்டு கோவிலுக்கு செல்ல ஆயத்தமான போது எனது அம்மா வீட்டில் உள்ள சிதம்பரத்தையில் ஓர் பூ இருந்தது; அதைப் பிடுங்கி என்னிடம் தந்தார், கொண்டுபோய் கோயிலில் கொடு என்று. நானும் வாங்கிச் சென்றேன்.

கோவிலுக்குச் சென்று நாங்கள் உள்ளுக்குள் நுழைந்ததும் என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. அன்று என்கனவில் வந்த அதே ஐந்து தலை நாகம், "வைத்தீஸ்வரநாதரின்" தலையை அலங்கரித்த வண்ணம் இருக்கிறது. "எனக்கு மயிர்கூச்செறிந்தது". கண்ணால் கண்ணீர் வடிய, என் தங்கை குளிரில் நடுங்குகிறேன் என நினைத்து "என்ன? என்ன?" எனக் கேட்டார். "பிறகு சொல்கிறேன்" என்று கூறி நான் கொண்டுவந்த பூவை தட்டில் வைத்து விட்டு இறைவனைச் சுற்றிக் கும்பிட்டு விட்டு வந்து அர்ச்சனை செய்ய முன்புறம் நின்றேன். நிற்கும்போது, எனக்கு ஒரு சந்தேகம் "நான் கண்டது இந்தச் சிவனைத் தானா? அல்லது எமது ஊரில் உள்ள சிவனையா?" என்று.

அர்ச்சகர் பூசை செய்யும்போது நான் கொடுத்த அதே மலரை சிவனின் அருகில் உள்ள நாகத்தில் வைத்து தீபம் காட்டுகிறார். எனது மனதில் உறுதியாகியது. சந்தேகம் இல்லை. என் தங்கையும் அம்மாவும் வேண்டிய வேண்டுதலின் பேரில் எமது ஓட்டாவா வைத்தீஸ்வரர்தான் எம்மிருவரையும் இங்கு அழைத்து வந்துள்ளார் என்று.

அன்றுமுதல் நான் வைத்தியநாதர் மேல் அளவு கடந்த பயபக்தி கொண்டு வணங்கி வருகின்றேன். மனமுருகி உண்மையான மனதுடன் "எம் வைத்தியநாதரிடம் நீங்கள் கேட்டால் அவர் அதை நிச்சையம் நிறைவேற்றுவார்", என்பது என் வாழ்வில் நான் அனுபவித்த உண்மை. அதை இவ்வேளையில் அனைவருக்கும் இக்கட்டுரை மூலம் அறியத்தர வாய்ப்பளித்த கோயில் நிர்வாகத்துக்கும் நன்றியைக் கூறுவதோடு, எனக்கு இதற்கும் 2 நாட்களுக்கு முன் ஆசியைக் கனவில் தந்தருளிய வைத்தியநாதருக்கும் எனது மனப்பூர்வமான பிரார்த்தனைகளச் சமர்பிக்கின்றேன்.

**பின்குறிப்பு:** என்ன எழுதுவது என யோசித்துவிட்டுப் படுத்தேன். அதே காட்சி மீண்டும் கனவில் வந்தது - ஆசீர்வாத்த்துடன்.

@@@@@@@

## சூடம் ஏற்றி தீபாராதனை செய்வதன் நோக்கம்.

சூடம் கரைந்து தீபத்தோடு கலந்து நிற்கும். மீதம் எதுவும் இருக்காது. அது போலவே, முக்தி நிலையில் ஆன்மா "தற்பேதம்" என்பது சிறிதுமின்றி இறைவனுடன் கலந்து நிற்கும் என்பதைத் தீபாராதனை காட்டுகிறது. ஞான ஒளியே தீபாராதனை ஆகும்.

## கோயிலை ஏன் மூன்று முறை வலம் வருகிறோம்.

மனம், மொழி, மெய் மூன்றையும் இறைவனிடம் சரண் செய்கிறோம் என்பதை மும்முறையும் வலம் வருதலை குறிக்கிறது. தூல, சூக்கும, காரண உடல் மூன்றையும் இறைவனிடம் ஒப்புவிப்பதை இது குறிக்கும்.

## உத்தரியம் அணிதல்

உத்தரியம் அணியும் போது அதனை இடத்தோளின் மேலிருந்து அணிய வேண்டும். சால்வை அணியும் போதும் அப்படியே, ஏனெனில் சிவனுக்கு இடப்பாகத்தில் உமையவள் இருப்பதால் அவளைப் பாதுகாக்கவே இடப்பக்கம் மறைக்கப் படுகிறது.

## சங்கல்பம்

சங்கல்பத்தின் போது பவித்திரம் (தர்ப்பை) ஆண்கள் வலக்கரத்தின் மோதிர விரலிலும் பெண்கள் இடக்கரத்தின் மோதிர விரலிலும் அணிய வேண்டும். அர்த்தநாரீஸ்வர தத்துவத்தின்படி பெண்ணுக்கு இடப் பாகமாதலால் மூக்குத்தி, பவித்திரம், சேலைத்தலைப்பு என்பன பெண்கள் இடப்பக்கமே அணிய வேண்டும். காப்புக் கட்டுவது நூல் கட்டுவது எல்லாம் பெண்களுக்கு இடப்பக்கமே.

# சிவநெறியிற் செல்வோம்

பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு

இன்றைய உலகில் ஏழாயிரம் மில்லியன் மக்கள் வாழ்வதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அவர்களுள் ஏறத்தாழ ஆயிரம் மில்லியன் பேர் இந்து சமயத்தைப் பின்பற்றுவதாகக் காணப்படுகிறார்கள். சீன மதம், கிறீஸ்தவ மதம் இஸ்லாமிய மதமென்ற வரிசையில் நான்காவதாக இந்துமதம் விளங்குகிறது. இந்து மதத்தவர் பெரும்பான்மையாக வாழும் நாடு இந்தியாவாகும். அங்குள்ள 1300 மில்லியன் மக்களில் எண்பது வீதத்திற்கு மேற்பட்டவர்கள் இந்துக்கள், இந்தியாவுக்கு அருகில் உள்ள நேபாளநாடும் அதிகமான இந்துக்களைக் கொண்டது. தற்போது மதச்சார்பற்ற நாடாக அது விளங்கியபோதிலும் நீண்ட காலமாக உலகில் உள்ள ஒரேயொரு இந்து நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்திய பெருமைக்குரியது. இவை தவிர இந்தோனேசியாவின் பாலித்தீவும் இந்துக்கள் வாழும் பிரதேசமாகும். இலங்கையின் மொத்த சனத்தொகையில் 12 வீதமாக இந்துசமயத்தினர் உளர். இவர்களது எண்ணிக்கை சமீபகாலத்தில் தாழ்நிலையை அடைந்ததற்கும் பல காரணிகள் உள்ளன. ஏனைய சிங்கப்பூர், மலேசியா, மியான்மார், தென்னாபிரிக்கா, மொரிசீயஸ் பிஜி முதலிய நாடுகளில் கணிசமான தமிழர்களும், இந்தியர்களும் வாழ்வதனால் அங்கெல்லாம் இந்துமதமும் கடைப்பிடிக்கப்படுகிறது. இவற்றுக்கு அப்பால் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த வட அமெரிக்க நாடுகளிலும், ஐரோப்பாவின் பல நாடுகளிலும் அவர்கள் இந்துமதத்தை நழுவ விடாது கடைப்பிடிப்பவர்களாக வாழ்கின்றனர்.

இந்து மதத்தின் நிலை இவ்வாறிருக்க, **முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பெற்றியதாய் நிலவுகின்ற சைவசமயத்தின் பெருமையையும் அதன் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் பேரருளையும் எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.**

சிவன் அல்லது சிவம் என்பது செம்மையைக் கொடுப்பது, மங்கலத்தைத் தருவது, பேரின்ப நிலையை அருளுவது எல்லாமாக இருந்து இயற்கையை ஆளுவது, மூல மெய்பொருளாய் விளங்குவது என்றவாறு பொருள் கொள்ள முடியும். சைவத் திருமுறைகள் சிவபெருமானின் இயல்புகள் பற்றி தெளிவாக எடுத்தியம்புகின்றன. ஆதியும் அந்தமும் இல்லாதவர். அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகைத் திருமேனிகள் கொண்டு உயிர்களுக்கு அருள்புரிபவர். இயற்கையாகவே முற்றறிவுடையவர், இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்கியவர், விருப்பும் வெறுப்பும் இல்லாதவர், எமது மனதிற்கு எட்டாதவர், அவர் செய்யும் செயல்களால் மாத்திரமே அறியத் தக்கவர், அன்பே வடிவானவர், தன்னை வழிபடுபவர்க்கும் வழிபடாதோர்க்கும் அருள் செய்பவர், வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிப்பவர், எங்கும் நிறைந்தவர், எண்குணங்களையுடையவர் என வெல்லாம் சிவனின் இயல்புகள் அமைந்துள்ளன. பதி, இறைவன், பரம்பொருள், நிர்மலன், ஈஸ்வரன், ஈசன், பரமன், மெய்ப்பொருள், சிவன், சிவம் என்பன இவற்றுள் அடங்குவன. சைவசமயம் கூறுகின்ற கடவுளுக்கு சொரூபநிலை (சிறப்புநிலை) தடத்தநிலை (பொதுநிலை) என இருவித நிலைகள் உண்டு. சொரூபநிலையில் இறைவன் சுயப்பிரகாசமாய், குணம் குறிகளற்று விளங்குகின்றான். தடத்த நிலையில் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு தமது சொரூபநிலையில் நின்று பலபடிகள் இறங்கி வந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றான். அப்போது மேகேஸ்வரன், உருத்திரன், மால், அயன் ஆகிய நான்கு உருவத்திருமேனிகள் மூலமும், சதாசிவம் என்னும் அருவுருவத்திருமேனி மூலமும் ஆன்மாக்களின் பக்குவ நிலைக்குத் தக்கதாக அருள்புரிகின்றான். இறைவன் அன்பின் வலைதனில் அகப்படும் ஆரமுதாக விளங்குபவன். தேவர்களாலும் காணமுடியாத சிவபெருமான் அடியவர்களிடத்தில் எளிதாக அகப்படுவான்.

இறைவனை மெய்யன்போடு வழிபட்டு முத்தியடைவதற்காகச் சைவசமய ஆகமங்கள் நால்வகை மார்க்கங்களைக் கூறியுள்ளன. உடம்பாற் செய்யப்படும் சரியை, சடங்குகளாற் செய்யப்படும் கிரியை, மனத்தை ஒருநிலைப் படுத்தி பயிற்சிகள் செய்யப்படும் யோகம், அறிவு நூல்களைக் கற்பதனால் அடையப்படும் ஞானம் என்பனவே அவைகளாகும். இறைவனை எந்த உறவு நிலையிலும் வழிபடமுடியும் என்பதனைச் சைவசமயம் கூறுகிறது. திருநாவுக்கரசு நாயனார் இறைவனைத் தலைவனாகவும் (ஆண்டாள்) தன்னை அடிமையாகவும் கருதித் தாச மார்க்கத்தில் நின்று முத்தியடைந்தார். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் இறைவனைத் தந்தையாகவும், தன்னைப் புத்திரனாகவும் கருதிச் சற்புத்திர மார்க்கத்தில் நின்று முத்தியடைந்தார். சுந்தரமூர்த்தி நாயனாரோ இறைவனுடன் தோழமை மார்க்கத்தில் உறவுகொண்டு சகமார்க்க நெறிநின்று முத்தியடைந்தார். மாணிக்கவாசகப் பெருமான் ஞானமார்க்கத்தைப் பேணி சன்மார்க்கம் நின்று முத்திபெற்றார். இவையனைத்தும் எமக்கு உணர்த்துவது யாதெனில் எவ்வழி நின்றும், அவரவர் இயல்புக்கேற்ற வகையில் இறைவனை உள்ளன்பால் அடையமுடியும் என்பதாகும்.

சிவவழிபாடு மொழிகடந்து வியாபித்துள்ளதாயினும் தமிழுக்கும் சைவத்துக்கும் இடையேயுள்ள பிரிக்கமுடியாத பிணைப்பு வலுவானது. தமிழர் கண்ட சமயதத்துவமாக விளங்குவது சைவசித்தாந்தம். தமிழிலுள்ள சாத்திர நுல்களும் தோத்திர நூலகளும் இத்தத்துவத்தைப் பலவாறு விளக்கியுள்ளன. பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள், உண்மையை அடிப்படையாகக் கொண்டது சைவசித்தாந்த தத்துவம். ஒவ்வொரு சமயி இடமும் வாழ்க்கைக்குரிய தத்துவம் கட்டி யெழுப்பப்படுவதற்குச் சமய தத்துவம் கைகொடுக்கிறது. வாழ்க்கையின் சீரிய நடத்தைக்குச் சமயத்தின் வழிகாட்டல் இன்றியமையாதது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குச் சமயமாகிய அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட பண்பாட்டு விழுமியம் துணைநிற்கிறது.

ஆன்மாக்கள் மூவகையின. மலங்களும் ஆணவம் கன்மம் மாயை என மூன்றாகும். மும்மலங்களும் உடைய ஆன்மாக்கள் சகலர். மாயை தவிர்ந்த ஏனைய இருமலங்களும் உடையவை பிரளயகலர். ஆணவமலம் மட்டும் உடையவை விஞ்ஞானகலர். ஆணவம் அநாதியானது. ஆன்மாவின் அறிவை மயக்கி நிற்பது. ஆன்மா சிவமயனமாகும்போது சூக்கும நிலையில் ஒடுங்கிக் கிடப்பது. இருளிலும் கொடியது. கன்மமோ சஞ்சிதம் (பழவினை), பிராரத்தம் (செயல்வினை), ஆகாமியம் (புதுவினை) என மூவகைப்படும். மாயையும் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூவகைப்படும். மாயா தத்துவங்கள் முப்பத்தாறு. ஆன்மாவின் நற்செயல்களால் இருவினையொப்பு, மலபரிபாகம் ஏற்பட்டுத் திருவருட்சக்தி படிதலாகிய சத்திநிபாத நிலை உருவாகும். அதன்பிறகே ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவ நிலை ஏற்படும். அத்துவத நிலையில் ஆன்மா சிவத்தின் இயல்புகளைப் பெற்றாலும் சிவமாகமாட்டாது. இதனைத் "தாடலைபோற் கூடுநெறி" என்பர். இதுவே சைவசமயசாரம்; சைவசித்தாந்த தத்துவ உட்பொருள் எனலாம்.

நாம் வழிபடும் இறைவனான சிவபெருமானுக்கு கல்யாண குணங்களைக் கற்பிக்கிறோம். ஆனால் இறைவன் நிர்மலன், குணங்குறிகள் அற்றவன். இதனையே கந்தபுராணம் பின்வருமாறு கூறுகிறது.

**"ஊரிலான் குணங் குறியிலான் செயலின் உரைக்கும்**
**பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்**
**சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு**
**நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்"**

நன்மை தருவதோர் வாழ்வியல் நெறியாகச் சைவசமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி வாழும் தமிழர்களும், ஏனைய மொழிபேசுவோரும் எல்லையில்லாத சிவபெருமானின் புகழையும் நிறையும் போற்றிவாழ்கின்றமை கண்கூடு. "ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ." என்றார் மணிவாசகப் பெருந்தகை. "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார்சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர்நாம் வணங்கும் கடவுளாரே" எனப்பாடி சாதிபேதமற்ற சமூகத்தைக் காட்டி மதத்தில் புரட்சிசெய்தார் திருநாவுக்கரசர். இன்று இந்திய நாட்டின் எல்லாத் திசைகளிலும் சிவன் ஆலயங்கள் நீக்கமற நிறைந்துள்ளன. காசிவிஸ்வநாதர், தொடங்கி இராமேஸ்வரம் இறைவன்வரை "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" ஆக எம்பெருமான் விளங்குகின்றான். ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வோர் நாமம் சூடி நின்று அருள்கின்றான்.

இலங்கையில் பஞ்ச ஈஸ்வரங்களில் வீற்றிருந்த பழமைக்குரியவன். இன்று காலிக்கண்மையிலிருந்த சந்திரசேகர ஈச்சரம் அழிந்துவிட்டது. "ஆறென்றும் நதியென்றும் ஓடையென்றாலும் அது நீரோடும் பாதைதன்னைக் குறிக்கும்" என்ற கண்ணதாசனின் வரிகளுக்கு அர்த்தம் தருவதாகச் சிவபெருமானின் கோயில்களில் காணப்படும் மூர்த்தங்களும் நாமங்களும் "உள்ளது ஒரே இறைவன்; ஒரே பொருள்" என்னும் தத்துவத்தை மெய்ப்பிக்கின்றன.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் இல்லாவூர் அடவிகாடே" என்ற அப்பரடிகள் வாக்கினை உணர்ந்த எமது புலம் பெயர்ந்த சைவப்பெருமக்கள், தாங்கள் வதிகின்ற இடங்களில் எல்லாம் புதிது புதிதாகச் சைவலயங்களையோ, இந்து ஆலயங்களையோ அமைத்து வழிபாடியற்றி வருவது மனதிற்கு மகிழ்ச்சியூட்டுவதாகும். தவற விட்ட ஆட்டுக் குட்டியை தேடித் தவிக்கும் இடையனைப்போல அவர்கள் தமது சமயப் பண்பாட்டினைக் காப்பாற்ற அயராது பாடுபடுகிறார்கள். அந்த வகையில் கனடா நாட்டின் தலைநகராகிய ஒட்டாவாவிலமைந்து அருள் காட்டும் சிவனுக்கு புதுக் கோயிலுக்கான திருப்பணிகள் சிறப்புற அமையவும் நடைபெறுகின்ற தேர்திருவிழாவினை யொட்டி மலரொன்று வெளி வருவதும் இறைகருணையின் இனிய நிகழ்வுகளாகும். "தவமும் தவமுடையார்க்கே ஆகும்" ஆதலால் கனடியச் சைவமக்கள் சிவகருணையைப் பூரணமாகப் பெற்றிருக்கிறார்கள். அவர்களது பணி சிறக்கவும் சைவப்பெருங்கடலில் அவர்கள் மூழ்கி என்றும் இறவாத பேரின்பப் பெருவாழ்வு காணவும் இறையாசி கூடியருள்வதாக.

**"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
**ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட**
**மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்**
**நின்றதனெங்கும் நிலவி உலகெலாம்"**

-பெரிய புராணம்

@@@@@@@

# சைவசமயமும் சிவவழிபாடும்

**தமிழ்மணி, கவித்தென்றல் தமிழ்சுடர் க. உயிரவன்**
தலைவர், தமிழாழி இணையம்
மொன்றியால், கனடா - தமிழ்நாடு, இந்தியா

மனித இனத்தின் தொட்டில் என்று அழைக்கப்படும் லெமூரிய கண்டத்தில் தமிழினம் தோன்றியது. லெமூரிய கண்டம் என்பது இன்றைய இந்துசமுத்திரம் அல்லது தமிழாழி ஆகும். இது ஒளிவள நாடு, பெருவளநாடு, குமரிநாடு என மூன்று பெரும் பகுதிகளாக காணப்பட்டது. அதில் ஒளிவளநாட்டில் 'லெமூர்' என்ற மனித குரங்கினம் வாழ்ந்ததாக ஆய்வுகள் சொல்கின்றன. 'லெமூர்' மனிதக் குரங்கின் கூர்ப்பு வடிவமே இன்றைய தமிழ் இனத்தின் ஆதி மனிதனாகும். பெருவளநாட்டின் மனிதவளம் வளர்ச்சி அடைந்து மொழி தோற்றத்தை உருவாக்கியது. அந்த மொழி என்பது தமிழ் என அடையாளப்படுத்தும் ஆய்வுகள் உள்ளன. அந்த மொழி வழியே மனித தோற்றம் குமரிநாட்டின் நாகரிக மனிதனை உருவாகியது. அதாவது நாகரிகமடைந்த தமிழினம் உருவாகியது. குமரிகண்டத்தில் 49 தமிழ்நாடுகள் இருந்ததாகவும் 'மதுரை' என்பது தலைநகரமாகக் கொண்டு தமிழ்மொழி ஆட்சி மொழியாகத் தமிழர்கள் அரசாண்டார்கள். இங்கே முதல் தமிழ்ச் சங்கம் தோன்றியது என்று கூறுவார். பல தடவை ஏற்பட்ட கடல் கோள்களால் (சுனாமி) ஒளிவளநாடு, பெருவளநாடு, குமரிநாடு என மூன்று பெரும் நிலப்பகுதிகளும் கடலுக்குள் தாண்டன. இந்த பேரழிவில் இருந்து தப்பிய எஞ்சிய மனிதர்களே உலகெங்கும் பரவி பல இனமாகவும், பல மொழிகளையும் பேசுகின்றனர். இன்று இருக்கும் இலங்கை, இந்தியா இரண்டு நாடுகளும் குமரிநாட்டின் ஒரு பகுதியாக காணப்படுகின்றது. அதில் வாழ்ந்த மனிதன் அனைவரும் தமிழர்களே. ஆயினும் கால நீரோட்டதில் பல மொழிகளை பேசும் பல்லினங்களாக மாறிவிட்டனர். இன்று உலகில் உள்ள பலமொழிகளுக்கு ஒரு தாய்மொழியாகவும் ஒரு செம்மொழியாகவும் தமிழ்மொழி உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதித் தமிழர்கள் ஐந்து நில வெளிகளில் தன்னுடைய வாழ்க்கை முறைகளை அமைத்தனர். கடலும் கடல்சார்ந்த இடம், மலையும் மலைசார்ந்த இடம், காடும் காடுசார்ந்த இடம், வயலும் வயல்சார்ந்த இடம், மணலும் மணல்சார்ந்த இடமாகும்.

மலை மலைசார்ந்த பிரதேசத்தைக் குறிஞ்சி நிலம் என அழைப்பார்கள். இந்த நிலத்திற்குரிய கடவுளாக சேயோன் என்ற கடவுளை வழிபட்டனர். சேயோன் என்பது சிவந்தவன் செம்மையானவன் என்ற கருத்தைத் தருவதால் சேயோன் என்ற கடவுளே பிற்காலத்தில் ஈசன் என்றும் சிந்து வெளிகாலத்தில் சிவன் என்றும் சைவசித்தாந்த காலத்தில் நடராசர் என்றும் அழைக்கப்பெற்றார். நடனம், யோகம் இருகலைகளிலும் முதன்மையாக ஈசன் இருந்தமையை அறியலாம்.

எமது சமயம் இந்து சமயம் என்று இறைத்தன்மையோடு அழைக்கப்படுக்கின்றது. உலகம் முழுதும் இந்துக்கள் வாழ்ந்தாலும் இந்தியா, நேபாளம், ஈழம், மலேசியா, சிங்கப்பூர், கனடா, அமெரிக்கா, மொறிசியஸ், பிஜித்தீவு ஆகிய நாடுகளில் இந்துக்கள் செறிந்து வாழ்கின்றனர். இன்று உலகில் 850 மில்லியன் இந்துக்கள் வாழ்கின்றனர்.

இந்து சமயத்தின் தொன்மைக்கு காரணம் சைவசமயம் என்பது மறுக்க முடியாத உண்மை. சைவசமயத்தின் தொன்மையின் சான்றுகள், கல்வெட்டுக்கள், ஏடுகள், முத்திரைகள் அனைத்தும் இந்து சமயத்தின் தொன்மைக்கு தொல்லாதாரமாக அமைந்துள்ளன.

### இந்து சமயத்தின் நெறிகள்( பிரிவுகள்)

சைவம் (சிவன்), வைணவம் (திருமால்), சாக்தம் (சக்தி), காணபத்தியம் (கணபதி), கௌமாரம் (முருகன்), சௌரம் (சூரியன்)

இந்து சமயத்தின் ஆறு நெறிகளிலும் பிரதானமாக விளங்கும் நெறி சைவ நெறியாகும். சைவநெறி என்பது ஆதிச்சைவசமயமாகும். சைவ சமயத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமான். பின் உருவாக்கப்பட்ட இந்து சமயத்தின் மும்மூர்த்திகளில் முதன்மைக் கடவுளாக வழிபடத் தொடங்கினார்கள்.

சிவன் என்பது அன்பானவன், ஒளியானவன், இன்பமானவன். புனிதன், தூயவன், அழகன், இனியன், தாயுமானவன் என்ற கருத்துக்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

மிகப்பழைய காலத்தில் இருந்த சுமேரிய நாகரிகம், எகிப்து நாகரிகம், மாயா நாகரிகம், சிந்து வெளி நாகரிகம் அனைத்திலும் சிவன் வழிபாடு இருந்தமைக்கு ஆதாரம் கிடைத்துள்ளன.

சிந்துவெளி நாகரிகம் சிறந்து விளங்கிய மொகஞ்சதாரோவில், கரப்பாவில், கண்டெடுக்கப்பட்ட பசுபதி முத்திரை சிவவழிபாட்டை உறுதி செய்துள்ளதாக திரு.சர்யான் மார்சல் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் ஈசன் வழிபாடே ஈசா, ஈசர் என மருவி மேற்கத்திய நாடுகளில் இஸ்லாமியர் ஈசா என்றும் கிறித்தவர் ஈசர் அல்லது ஜீசர் என்றும் வணங்கினார்கள். ஈசன் என்பதை (ஈஸ்ட் + சன்) என பிரித்து ஈஸ்ட் என்பது கிழக்கு திசையும், சன் என்பது சூரியனையும் குறிக்கின்றது. அதை தமிழில் ஈசான மூலை என்பர். ஆகவே உலகம் முழுவதும் சூரியனைக் கடவுளாகவும், அல்லது சூரியன் கடவுளின் அவதாரம் என்றோ நினைத்து சூரியன் உதிக்கும் திசையிலே ஈசன் இருப்பதாக உலகத்தில் வாழும் அனைத்து மக்களும் நம்பினார்கள். ஆதியும் அந்தமும் இல்லாதவன், சோதிவானவன். செந்நிறத்தோன், சேயோன் ஆகிய தொடர்கள் சூரியனை அல்லது சூரிய திசைக்கடவுள் ஈசனை குறிக்கின்றது. லண்டனில் சூரியக்கல் வழிபாட்டு இடமும், அமெரிக்காவில் கொலாராடோ என்ற இடத்திலும், தென் அமெரிக்காவில் பேரு என்ற நாட்டிலும், சீனாவில் சீரழிந்து இருக்கும் சிவன் கோவிலும், எகிப்து, சுமேரியா பிரதேசத்தில் சிவலிங்க வழிபாடு ஆகியன ஈசன் வழிபாடு இருந்தமைக்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களால் தெளிவு படுத்தப்பட்டு உள்ளது.

சிந்து வெளிநாகரிகத்திற்கு பின்பே ஈசன் என்பதற்கு பதிலாக சிவன் என்றும் சிவவழிபாடு என்றதும் பரவியது. ஆனாலும் ஆதித் தமிழர் சேயோன் என்றும், வேதகாலத்தின் உருத்திரன் என்றும் உலக முழுவதும் ஈசன் என்று அழைக்கபெற்ற கடவுள் சிவன் என்பதை அறிஞர்கள் ஒப்புக்கொண்டனர். இந்தியாவில் சிவன் என்றும் ஈழத்தில் ஈசன் என்று வழிபட்டதை காணமுடிகின்றது. சிவன் கோவி லை இந்தியாவில் சிவாலயங்கள் எனவும், ஈழத்தில் ஈச்சரங்கள் (நகுலேச்சரம்,கோணேச்சரம், திருக்கேதீச்சரம், முன்னேச்சரம், சந்திரமௌலீச்சரம் (இப்போது இல்லை), தான்தோன்றீச்சரம் எனவும் அழைக்கப்பெறும்.

ஊழிக்காலம் முதல் இன்று வரை நிலைத்து இருப்பது சிவபெருமான் மட்டுமே. சிவனின் ஆற்றலை அல்லது சக்தியை உமை என்றும் அவரே பிரசாபதி தட்சனின் மகள் தாட்சாயினி ஆகவும், பர்வதராசன் மைனாகுமாரி தம்பதிகளுக்கு மகள் பார்வதி ஆகவும் அவதாரம் எடுத்து சிவசக்தியாக காட்சியளிக்கின்றார். சிவன் இன்றி சக்தி இல்லை, சக்தி இல்லையேல் சிவன் இல்லை என்ற உயரியல் தத்துவத்தை உலகிற்குக் கொடுத்து அர்த்தநாரீஸ்வரர் உருவத்தில் காட்சி தந்துள்ளார்.

சிவனுக்கு ஐந்து பிள்ளைகளாக பிள்ளையார், முருகன், வீரபத்திரர், பைரவர், ஐயனார் ஆவார். இவர்களுடன் சிவனும் உமையும் இணைந்து ஓர் இந்துக்குடும்பத் தத்துவத்தை அழகாக விளக்கியுள்ளனர்.

**சிவனை சித்தரிக்கும் அடையாளங்கள்**

ஞானக்கண் அல்லது நெற்றிக்கண், திரிசூலம், உடுக்கு, சடாமுடி, செந்நிறமேனி, புலித்தோல், யானைத்தோல், மழுகொலையாயுதம், பிறைச் சந்திரன், நாகம், கங்கை, வாசுகி பாம்பின் ஆலகாலம், உண்ட நீலநிறக் கழுத்து. இவற்றைக் கருத்தில் கொண்டு சிவனின் சிலைகள், படங்கள் காணப்படுகின்றன.

**சிவவழிபாடு**

காலையில் சிவனை வழிபட்டால் நோய்கள் தீரும், நண்பகலில் சிவனை வழிபட்டால் செல்வம் பெருகும், மாலையில் சிவனை வழிபட்டால் பாவம் தீரும், சாமத்தில் சிவனை வழிபட்டால் முத்தி கிடைக்கும்.

**சிவன் தொழில்கள்**

கூத்துப்பெருமாள் அல்லது நடராசர் வடிவத்தில் சிவன் ஐந்து தொழில்களையும் செயற்படுத்துக்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், வலக்கையில் உள்ள உடுக்கு, படைக்கும் ஆற்றலையும் (விந்தகம்), தாமரை உயிர்கள் பிறக்கும் வழியையும் (சூலகம்) இடக்கையில் உள்ள நெருப்பு அழித்தலையும், வலக்கையின் அகக்கை அருளையும், இடக்கையின் துதிக்கை மறைத்தலையும், தூக்கிய பாதமும், மிதித்தாடும் பாதமும் காக்கும் தொழிலையும் குறிக்கும்.

**சிவனின் ஐந்து முகங்கள்**

சத்யோசோதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் ஆகியன சிவனின் ஐந்து முகங்களாம்.

**சிவவடிவங்கள்**

அருவம், அருவுருவம், உருவம் ஆகிய வடிவங்களில் சிவபெருமான் காட்சியளிப்பார்.

@@@@@@

# Necessity of Faith

**Sriskanthan Balakrishnan**

Religious definition of faith is complete trust or strong belief in God. People interpret faith differently. It can be interpreted as belief that God will protect, teach, guide, motivate, and help seeker in need. In my opinion, Temples came into existence because of this faith or belief in God. People believe that congregating and participating in group prayers in Temple is a way to communicate with God. Some people believe that faith in God gives them strength to overcome hardship, helplessness, pain and suffering during their turbulent periods in their lives and for some, faith is an added strength to pursue their endeavours. They believe that God is with them to guide them through thick and thin periods of times.

Human beings from time of birth experience sufferings and happiness. During our life time, at times we get into troubles knowingly or unknowingly. Generally, we say that it is due to our destiny (Vithy) we got into that situation. When we go through hardships we are vulnerable and it is our faith in God that guides us in the right path. We develop faith in God from our childhood as we have been observing our older generation who had faith in God. Once we have come to believe in God, our salvation is assured. However, in Hinduism belief is only the first step. Hindus want to move beyond just believing in God to experiencing the Divine for themselves.

The cultivation of faith can be compared to the growth of a tree. As a young sapling, it can easily be uprooted, just as faith based solely on belief can easily be shaken or destroyed. Faith bolstered with philosophical knowledge is like a medium-size tree, strong and not easily disturbed. Faith matured by personal experience of God and the Gods is like a full-grown tree which can withstand external forces.

Faith in its initial stage is simple belief without the support of either knowledge or experience. Keeping our faith strong in this phase depends heavily on the company we keep. We need to associate with spiritual companions and avoid worldly and non-religious people. Faith in its second stage is belief strengthened by a sound understanding of Hindu philosophy. In the third stage of faith, personal experience transforms informed conviction into certainty.

Gods faith induces us to help each other and perform service to the community. One needs to do social/community related volunteer services in order to fulfill the existence in this world. Consider doing the following to cultivate faith in God:

- Choose and hold good positive thoughts in mind.
- See that your actions bring benefits to you and others.
- Do not obstruct other/s helping other/s.
- Respect others and their faith regard less of what religion they follow.
- Do volunteer work at Temple to keep your body and mind healthy.
- Sing ‘Thevarams’, chant Mantras and partake in rituals in Temple.

Chinmayanantha Swamy says "Faith is to believe what you do not see. The reward of faith is to see what you believed."

@@@@@@

# HINDU TRADITIONS OF LORD SHIVA WORSHIP AND MODERN TRENDS IN BALI


## AMBI CHINNIAH

MA Criminology and MCA CRIM. Ottawa University.

Pro Bono Consultant for Management Advisory Services

(M.A.S for Non Profit Organizations in Ontario)


In 2011, I was fortunate to visit the island of Bali, in Indonesia, on the invitation of Dr. Ramesh Sastri, the Director of Mahendra Datta University.

Visiting Bali was something I had contemplated for more than twenty years. My friend, the late Mr. Sharma of the Indian High Commission, often referred to Bali as the land of a thousand Sivan temples. He had visited the island in 1989 and was impressed by the predominance of Hinduism and the way in which the ancient traditions of Hinduism survived since the beginning of the first century A.D.

Prior to the advent of Hinduism, ancient Bali was a nation steeped in animism and worshipping of spirits and demons. As Hinduism began to spread, the Balinese people struggled to retain the sacred traditions of Hinduism, and let go some of the more extreme ascetic aspects of Hindu worship.

Modern day Balinese Hinduism is an amalgamation of Indian religions and some aspects of Buddhism and indigenous animist customs of ancient Bali. Hinduism is officially referred as 'Agama Hindu Dharma' as well as Siva Budda in Bali. Hinduism in Bali grew as it adapted with the diverse cultural practices of the locals. Indian Hindus believe in vegetarianism, worship the cow 'Nandi' in Siva worship and the abhor the consumption of beef. But in Bali, Hindus do not adhere to vegetarianism and are avid beef eaters.

Despite these inconsistencies, the Hindus in Bali are noted for the devotion with which they faithfully practice their religion. Their dedicated daily ritual include offering 'Comang Sari' three times a day (morning, noon and evening) to the almighty creator Lord Siva.

The 'Comang Sari' consists of a small package woven in palm leaf and elegantly decked with fragrant flowers, select herbs and freshly cut fruits. These offerings are seen at the door ways of most houses and on sidewalks in front of shops and businesses. It is considered a sacrilege to even accidentally step on the offerings which are consecrated to God.

Being a devout Hindu, I was curious to see how the people of Bali followed the ancient traditions of Hinduism. Most Balinese could recite verses from the epics Mahabaratha, Ramayana and the Baghavat Gita. I wanted to understand how these sacred traditions of Hinduism came to be cherished and avidly retained in Balinese Hinduism.

The origins of Hindu traditions in Bali can be traced to the religious zeal of South Indian kings to spread Hinduism to the neighboring south east Asian countries from Burma, Sumatra, Malaysia, Cambodia, Java and Indonesia including Bali. The first century inscriptions unearthed in Western Indonesia confirm the widespread adoption of 'Siva lingam' worship during that time.

The heavy concentration of Hindus in Bali was due to historical developments after the spread of Islam in mainland Indonesia. The religious intolerance led Hindus from all parts of Indonesia to retreat to the island of Bali. Hinduism became sheltered in Bali and continues to be the last bastion of Hinduism in present day Indonesia.

As devout Hindus the Balinese are simple,

honest people who believe in Karma and the Karmic laws of retribution. We discovered the simple honesty of the people in Bali when we lost a wrist watch at a restaurant. We were stunned by the recovery of the expensive watch after a lapse of three days. We went hesitantly to the restaurant and were astonished that the receptionist had the wrist watch at hand and declined to accept any money for this act of generosity. For the Balinese, this was an honest simple routine act of service to Lord Siva their almighty God.

It has been estimated that there are no less than ten thousands Hindu temples in Bali. They range in size from small shrines in housing complexes to large astounding temples of great repute. They were built to precision by visiting South Indian Architects and Sculptors to emulate the magnificence of the ancient temples of India. The small shrines are spread all over Bali and most are dedicated to ancestor worship by Balinese families. There are also some small shrines dedicated to various spirits to protect their families and their fields from evil force.

In Bali, there are more than twenty large historic Hindu temples, many of which were built in ancient times by several great kings. These temples were built to precision by highly skilled sculptors and architects from South India who were invited by the kings to build these temples for the glory of Hinduism. Though the temples in Bali bear some resemblance to Hindu temples in South India, they were missing the 'Gopuram' at the door way or entrance to the temple. Instead of the Indian style 'Gopuram' the Balinese temples have been designed to accommodate the towering Hindu-Buddhist tiered Pagodas similar to the Pagodas built in China and Japan. Balinese Hindu temples are designed on a square Hindu temple plan as an open air worship place in the outer perimeter with enclosed walls that are connected with a series of intricately decorated gates.

Most festivals are conducted in the outer courtyard of the temple.

This is where most dramas are held after the temple ceremonies. The dramas depict the moral lessons instilled in the Vedas and epics like Ramayana and Mahabaratha. The inner sanctum of the temple is the sacred resting place for the almighty in the form of a deity. The transition zone between is for the storage of sacred items required for all ceremonies including the garb of the deities and the sarongs or garb for the priest and the worshippers at the temple.

The first temple I visited was the 'Tanah Lot' a popular Sivan Temple dedicated to Lord Siva in western Bali. The temple is built on a large rock encircled by sea water. The other Sivan temple we visited was the 'Uluwatu temple dedicated to Lord Siva as Rudra. This is one of the biggest temples in Kuta district in Southern Bali. The temple is set on a sea cliff facing the Indian ocean. Another temple dedicated to Lord Siva and his consort Parvathy is the'Pura Ulun Danu Bratan' the major Shavaite water temple in Bali. The Batukaru temple 'Pura Lahur' is one of Bali's important temples in the central highlands also devoted to Lord Siva as 'Maha Deva'.

We regret not having made our homage to the 'Mother Temple, Pura Besakhi' on the slopes of an active volcano on Mount Agnung. Balinese believe that Lord Shiva and a pantheon of Gods chose this temple as their throne and most holy palace abode near the peaks of Mount Agung. This is similar to our Hindu belief in 'Kailash' as the throne and palace abode of Lord Siva and other Gods on the Mountain peaks of the Himalayas in Tibet. The active volcano in Mount Agung make the Balinese fear and revere with awe the frequent volcanic eruptions as the 'Wrath or Fury' of Lord Siva and other Gods. The volcanic eruptions are considered the divine providence to unholy evil acts of the Balinese people.

These temples in Bali, reflect a belief in one supreme being in Lord Siva and that all other Gods worshipped are manifestations of Lord Siva the supreme being.

**"OM NAM SIVAYA, SIVAYA NAMA OM"**

# Saiva Siddhantam

**Dr. B.Natarajan**

Central to the Saiva Siddhanta system is the Pati-Pasu-Pasa triangle. Pati or the Master stands for God. Pasu is the individual soul in ignorance. And Pasa is the bondage of Maya those ties down the individual soul. All these three entities are real and hence Saiva Siddhanta looks like pluralistic realism. But it calls itself Suddhadvaita. 'Suddha' here means unqualified and Advaita' is 'Devoid of duality'. The difference between the three entities is real in existence, but they are inseparably united with Him who is the Supreme Reality.

Siva, the Pati, is also called hara, Isa, Natha, Nandhi, etc. He is the First Cause even as the potter who fashions the pot. Just as the staff and the wheel are the instrumental causes in the case of the pot, Sakti is the instrumental cause in creation. Just as clay is the material cause for the pot, Maya or Prakriti is the material cause for the world. Siva and Sakti have Tadatmya or identity represented by the form of Ardhanareeswara. Sakti is conscious, unchanging, eternal energy, the Svarupa Sakti of the Lord. The material cause of pure creation is Mahamaya (Bindu or Vidya) while that of defiled creation is maya or Jada (inert) and different from the Svarupa Sakti which is the essence of the Lord. The Lord Himself is omnipotent, omnipresent and omniscient. Siva is not just one of the Trimurtis of the Puranas. He is the source from which the Trimurtis emnate. He is both immanent and transcendent. He is called Visvarupa and Visvadhika – universal in form and beyond the universe. Again, He is Sarupa and Arupa, and form and without form. This is symbolized by the Linga which is a formless form. He is said to be ashtamurti – embodied as the five elements, the sun, the moon and man. He has eight qualities – innocence, purity, self-knowledge, omniscience, freedom from malas or stains, benevolence, omnipotence and bliss.

He is said to be Nirguna, not in the sense of having no quality, but in the sense that He is not tainted by the Gunas of Prakriti. He has five functions "Pancha kritya" creation (Srishti), preservation (Sthiti), destruction (Samhara), obscuration (Tirodhana), and liberation (Anugraha). When the devotees need Him, Siva assumes ad hoc embodiments, 'plays' with the devotees for a while, and then vanishes.

The individual soul in the Siddhanta is called Pasu, because like cattle he is bound to the world by the rope of Avidya. The soul is all pervading, eternal and conscious agent capable of enjoyment (iccha-jnana-kriya yuktah). He is distinct from the gross and subtle bodies he inhabits. Bound souls suffer because they mistake themselves to be finite, limited in thought, will and action; but when liberated they get restored to their original nature.

The Pasas or fetters that bind the Pasu, are of three types. They are called Malas or stains – Anava Mala, Karma Mala and Maya Mala. The Anava Mala corresponds to the original sin or Mula-avidya. It is the same in all, and is beginingless. Anava means of the nature of Anu or atom. The reference is not to size but to finiteness. The soul feels confined and limited to the body and the sense organs. The Anava Mala makes the Jiva ignorant of his real glory and power. Under the influence of Anava, the soul indulges in all manner of actions, aquires merits and demerits and becomes subject to birth and death.

This is Karma Mala. It causes the union of the conscious and unconscious. The third Mala is due to Maya, the material cause. It gives the soul the means and objects of enjoyment. Through spiritual disciplines and love of God the Maya Mala, and Karma Mala can be effaced. But Anava Mala can be removed only by the grace of God.

According to the Malas lingering, the souls are divided into three kinds. The Sakalas have all the three Malas. The Pralayakalas have got rid of Maya Mala, but are subject to Karma and Anava; while the Vijnanakalas, who are the highest, evolved have only Anava Mala, from which they can get free only through total surrender to the Lord and His grace. The wind of God's grace, as Sri Ramakrishna observes, is always blowing, only we have to be sensitive and avail ourselves of it.

When all the Malas are removed, the Jiva becomes one with Siva. He becomes co-operative with Siva and shares all His glory and greatness. He has not lost his individuality, but because of the overwhelming bliss, he is not aware of it. Meikantar compares this to salt dissolved in water. But the Pancha Kritya belongs only to the Lord, the Mukta Jiva identifies itself with matter, it becomes bound, and when it identifies itself with Siva it becomes Mukta.

Four approaches to the Ultimate are blueprinted in the Siddhanta.

The first is Charya which involves doing service in the shrines like cleaning the premises, gathering flowers for worship etc. This is Dasa Marga, the path of the servitor. It leads to Salokya Mukti, i.e. the devotee abides in the sphere of the Lord. The second path is called Kriya.

It consists of ritualistic worship. It is termed Satputra Marga, the path of the Lord's child. It leads to Samipya mukti – the devotee is close to the Lord. The third approach is that of Yoga, calling contemplation. This is called Sakha Marga, the path of the Lord's friend. It leads to Sarupya Mukti. The devotee attains the form and the various insignia of the Lord. These three approaches are considered preliminary. They are the rungs in the ladder which leads to Jnana or direct realization. It is called Sanmarga and culminates in Sayujya Mukti, complete union with the Lord. But, as we have already mentioned, the individuality is not lost. The Siddhanta does not say `There are not two`, but it asserts `They are not two`.

@@@@@@@




Summer Camp 2014


Above the Best
Driving School
www.abovethebest.com
முத்துலிங்கம் தம்பிராசா
• Ministry Approved Courses
• Insurance reduction & road test in 8 months
• G1 Exit & G2 Exit Programs
• Car available for road tests
• Best reputation and best prices in town
• Special discount rates available for the winter
613-721-6869
613-789-6666
Unit 205, 1902 Robertson Rd
Ottawa, K2H-5B8 (Bells Corners)
நிறைந்த சேவை! சிறந்த பயிற்சி!


THANA STORE
A Friendly place for all Indian, Sri Lankan, Caribbean, South Asian Groceries, Fish and Meat also available. Indian Snacks and Jamaican Patties, Home Made South Indian "Packed Food" and Home Videos.
Tel: (613) 567-2963
386 Bank Street Ottawa


VANI SRIKANTHAN
Sales Representative
Buy, Sell or Invest in Real Estate anywhere in Ontario
Sell your home as low as 3% comission
Ask me about commission cash back
Direct: 613-851-9261
VaniSri2@yahoo.ca
Your Choice
Realty Corp.
BROKERAGE



Full HD
1080p
அர்ச்சனாஸ் & கோ
அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்
அனைத்துவகை பூஜைப்பொருட்களையும்
மொத்தமாகவும், சில்லரையாகவும்
பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.
பூமாலைகள், மல்லிகைச்சரம்,
பரதநாட்டிய ஆடை ஆபரணங்கள்,
HD Video & Photography,
Photo Album & Movies.
416-292-0033
www.archanas.ca
2950 Kennedy Rd. Unit 10A
Scarborough (One Block North of Finch)




Plan your financial future
with complete
Confidence!
GT Brokers
Protect You & Your Family
www.gtbrokers.ca
Aim for a high quality of life
with the support of a professional
Guna Thuraisingham M.A.Sc(Eng), P.Eng
» Super Visa, Travel & Visitors Insurance
» No Medical Exam Life Insurance
» Permanent/Term Life Insurance
» Disability Income Insurance
» Critical Illness Insurance
» Mortgage Insurance
» Long Term Care Benefit
» Business Succession Plan
» Buy/sell Agreement
» Group Benefit Plan
» Estate Planning
» RRSP/TFSA and RESP
Guna Thuraisingham M.A.Sc(Eng), P.Eng
Financial Advisor
416 528 1407
guna@gtbrokers.ca
Desjardins
IA INDUSTRIAL ALLIANCE
Manulife
Assomption Vie Assumption Life
Foresters
RBC Royal Bank







ATT

OTTAWA FENCE

PVC Fence, Iron Fence, Sliding Gate, WPC Fence, Flag pole, Granite Interlock



Tel: (613) 277 0278

www.attottawafence.com

6820 Mckeown dr, Greely Industrial Park, Ontario

# JEGATHEESWARALAYA

Fine Arts Training Centre *(Reg.)*

Founders: *Guhendran & Lushanthini*

**Guhendran** is a Diploma holder in Bharatanatyam & Nattuvangam from "BHARATHA CHOODAMANI" (Chennai, South India - *'Padmashri'* Adyar K. Lakshman). He was a University Lecture in Colombo and a Teacher since 1995. **Lushanthini** is a Graduate from North Ceylon Oriental Music Society (Jaffna, Sri Lanka). She is Teaching and Performing since 2004.

*Classes for Boys & Girls, from Beginning to High Level*
*Coaching for Canadian Exams & Credit Courses*
*Nattuvangam & Special training to make this art a profession*

**Diploma Certificate** *obtained upon completing the training in* Bharatanatyam & Nattuvangam.

**International Certification in Dance Studies** *provided upon enrolling in the scheme.*

**Contact:**
416-824-4339 / 647-556-1603
613-271-0744 / 613-435-4780



# FASHION FLORIST INC

**4400 Sheppard Ave. E**
**Unit 5**
**Scarborough ON M1S 5J5**

**Tele: 416-754-8282**



- திருமணவைபவ – வழிபாடு மாலை
- கோவிலுக்குத் தேவையான மாலை
- மரணவீட்டுக்குத் தேவையான பூவளையம், மலர் அடுக்குகள்

**Contact Babu: 416-509-2646**






Francis & Francis

Barristers, Solicitors, Notaries Public

200 – 1390 Clyde Ave, Ottawa, ON K2G 3H9

Tel: (613) 226-1011 • Fax: (613) 226-2629

www.francisandfrancis.ca

Areas of Practice:

Real Estate
Civil Litigation
Corporate & Commercial Law
Wills & Estate Planning
Mediation & Negotiation
Family Law



தமிழில் உரையாடி உங்களது
சகல பல் சம்பந்தமான
சிகிச்சைகளுக்கு நாடுங்கள்

# CRAIG HENRY DENTAL

CALL
613-224-2000
TO MAKE AN APPOINTMENT

CHECK US ON THE WEB
WWW.CRAIGHENRYDENTAL.CA



UNIT 106-100 CRAIG HENRY DRIVE, OTTAWA, ONTARIO, K2G5W3,CANADA

IN CANADA'S CAPITAL

I PROVIDE

REAL ESTATE

&

MORTGAGE

SERVICES

RAJEEV VARATHARAJAH

REAL ESTATE & MORTGAGE AGENT

613.867.6233

Rajhomes5@gmail.com

COLDWELL BANKER*

Office 613.288.1999
2544 Bank Street
Ottawa, ON K1T 1M9

* Each office is independently owned and operated

MORTGAGE ALLIANCE

THE GUARDIAN*

Office 416.556.7002
80 Nashdene Road, Unit D221-222
Toronto, ON M1V 5K4
Licence #M15001082 | Brokerage License#12521

# Nantha Aiyadurai ,B.Eng

## Real Estate Broker

*Your Reliable Real Estate Voice!*

*As your trusted, patient, reliable and highly experiences realtor, I am always available to assist you with buying, selling or investing in real estate.*



*"Thank you for the continued support and trust you have placed in me for important decisions that have affected you, your family, your home and your investments for over 12 years!"*

COLDWELL BANKER

SARAZEN REALTY
BROKERAGE

International Presidents Elite

2544 Bank St
Ottawa, ON K1T 1M9
www.nantha.ca

Direct:613-850-9931
Office:613-288-1999
Email :nantha@coldwell.ca

# T & K Auto Services

**41 Cleopatra Drive, Ottawa, ON, K2G 0B6**

**Business: (613) 722-4794**

**Cell: (613) 600-5422**

## OUR SERVICES

- Safety Standard Inspection
- Tire change (Install & Balance)
- All type of brake system repair
- Tune Ups
- Heating/Cooling Repair
- Computerized Diagnostics
- Oil Change
- Timing Belts
- Exhaust System
- Cooling system service
- Major engine repair
- CV boots/struts

*Complete Auto Detailing*

Car: $89.99+tax
SUV: $120+tax

### Hours of Operation

Monday to Friday: 8.30AM to 6:00PM
Saturday: 9.30am to 4.30PM
Sunday: Closed

*Call Siva Selva for all your Car Care Needs*

SATISFACTION 100% GUARANTEE

FREE Wi Fi AVAILABLE *Free WiFi Available while your Car Being Repaired*

**Designed by:Kuman Selva**

**Choosing the Right Professional Sales Representative Saves You Thousands of Dollars**

# •Invest •Buy •Sell

## Residential Or Commercial Properties

**Deal with somebody, You can trust and rely on, for all your Real Estate Needs**




## Vahesan Srirajasingam

Sales Representative, Excutive MBA , M.A.Sc (Eng)

**Dir: 613-866-1719** (Ottawa)

**Dir: 647-971-5157** (Toronto)

## www.homeswoodlands.ca

**HomeLife/Future Realty Inc.,** Brokerage*

205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8

**Bus: 905-201-9977** Fax: 905-201-9229

**Indepedently Owned And Operated*